www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஆகஸ்ட் – 2001
ம.க.இ.க மாத இதழ்
ரூ 5.00



ட்ரேசி சாப்மன் :
...எதையும் காணவில்லை



# வேலையற்றவர்களா தேவையற்றவர்களா?

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




✍ *வெள்ளைப் பயங்கரம்* சிறுகதை பாதிரியார் நயவஞ்சகமாக ஆக்கிரமிப்பு செய்வதை மிக எளிமையாக விளக்கியுள்ளது. எமது வாசகர் வட்ட நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் ஒருவர் 'விளம்பரங்களின் மீது நமது பார்வை' என்ற தலைப்பில் விளம்பரங்களின் மோசடியையும் - வியாபார வெறியுடன் நடத்தப்படுவதையும் விளக்கினார்.

**— வாசகர் வட்டம்,**
**ம.க.இ.க. சென்னை.**

✍ இந்து மதவெறியர்களிடம் பாசிச ஜெயாவின் ஆட்சியைக் கலைக்கச் சொல்லும் கருணாநிதி மற்றும் திராவிடக் கொழுந்துகள்; இந்து மதவெறியை மறைமுகமாக ஆதரிக்கும் ஜெயாவிடம் எலும்புத் துண்டிற்காகக் கெஞ்சும் போலிக் கம்யூனிஸ்டுகள், வீரமணிகள், மூப்பனார்கள்.... இப்படி *இருண்ட காலம் அத்தியாயம் இரண்டு* பற்றிய தலையங்கம் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருந்தது.

**— செம்மலர் மா. நடராசன்,**
**அறந்தாங்கி.**

### பேருந்து விற்பனை அனுபவம்

✍ தலையங்கம் பற்றி மக்களிடம் பேசும் போது 'முந்தைய பாசிச ஜெயாவின் ஆட்சி இருண்டகாலம் ஒன்று, இப்போது **மம்மி ரிடர்ன்ஸ்** மாதிரி பாசிச ஜெயாவின் இருண்ட காலம் அத்தியாயம் இரண்டு தொடங்கியிருக்கிறது' என்றும் கருணாநிதியின் கைது பற்றி விளக்கும்போது இது ஜனநாயக நாடு இல்லை என்று நாங்கள் சொன்ன போது யாரும் நம்பவில்லை. ஆனால் இப்ப ஒரு மனிதனுக்கு ஜனநாயகம் இல்லையென்று சொல்வதற்கு ஆளுக்கொரு டி.வி. வேணும் போல'' என்று பேசியது மக்களிடம் வரவேற்பைப் பெற்றது.

இந்த இதழ் விற்பனையில் கிராம பேருந்து மக்கள் அதிகமாக வாங்கினர். ஒவ்வொரு பேருந்திலும் 5 முதல் 10 பிரதிகள் விற்பனையாகின. 2 மணி நேரத்திலேயே 100 பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.

**— ம.க.இ.க. கலைக்குழு,**
**திருச்சி.**

✍ 'உன் அடிச்சுவட்டில் நானும்' நூலை அனைவரும் படிக்க வேண்டியது அவசியம். நகூயென் வான் டிராய் அவரின் போராட்ட வாழ்க்கையையும், அவர் வழியொற்றிய அவரின் மனைவி குயென் - இவர்களிடம் இருந்து நாம் கற்க வேண்டியது நிறைய உள்ளது.

**— மலர்கொடி,**
**திருச்சி.**

✍ மக்கள் தொகை குறைவாக உள்ள ஐரோப்பாவில், ஐரோப்பிய ஒன்றியத்தை எதிர்த்துப் போராடிய சுவீடன் மக்களை நினைத்து வியந்தேன். 'இன்ஜே' என்ற இளைஞர் கூறிய சம்பவத்தைப் படிக்கும் போது, இன்னும் ஏன் உங்கள் நாட்டில் இப்படி ஒரு போராட்டத்தைத் தொடராமல் இருக்கின்றீர்கள் என்று முகத்திலறைந்து கேட்பது போல இருந்தது.

**— இந்துமதி,**
**திருச்சி.**

✍ *'தங்கக் கவுச்சி'* கவிதை பற்றி... தங்கம் ஆபரணமா, ஆயுதமா? இதிலென்ன சந்தேகம், ஆயுதந்தான். கலாச்சாரம் எனும் பெயரால் கண்ணைக் குருடாக்கும் ஆயுதம். நடத்தை கெட்ட பெண்ணைக் கூட சகிக்கும் சமூகம், நகை அணியா பெண்ணைச் சகிக்க மறுக்கிறது. தங்கத்தின் பெயரால் எம் தன்மானம் உரசப்படுகிறது. அழைத்த இடங்களிலெல்லாம் அந்நியப்பட்டோம். தந்தையாலேயே தள்ளி வைக்கப்பட்டோம். போலி மதிப்பீடுகளில் புழுங்கியது உடல் மட்டுமல்ல, எம் சிந்தனையுந்தான். அடிக்க அடிக்க இறுகும் இரும்பாய் இறுகி நின்றோம். இறக்கி வைத்த பின்புதான் தெரிகிறது, எத்தனைப் பெரிய சுமையை சுமந்தோமென்று. விலங்குகள் எம்மோடு போகட்டும். எம் தலைமுறைக்கு வேண்டாம்.

**— சுகுணா தேவி,**
**சமயநல்லூர்.**

✍ நான் கடந்த சில மாதங்களாகத்தான் ''புதிய கலாச்சாரம்'' பருகி வருகிறேன். உலகை - உண்மையில் உண்மையாய்ச் சொல்வதில் உங்களுக்கு இணை இல்லை என்பதை பல இதழ்களைப் படிப்பதிலிருந்து தெரிந்து கொண்டேன். சென்ற இதழில் டெண்டுல்கர் உலகச் சந்தையில் விலை போகிறார் என்ற உரையாடல் கட்டுரையைப் படித்தவுடன், முதல் திருப்பமாய் டெண்டுல்கர் ரசிகன் என்ற பதவியிலிருந்து இறங்குகிறேன்.

**— அ. பிரபாகரன், கோடங்குடி,**
**சென்னை.**

✍ நானும் விபரம் தெரிந்த நாள் முதல் ஆனந்தவிகடன், குமுதம், மங்கையர் மலர், ராணி, தராசு, நக்கீரன்... இன்னும் எத்தனையோ கதை, கட்டுரைப் புத்தகங்களைப் படித்தேன். ஆனால் தாங்கள் வெளியிடும் புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம் ஆகியவற்றில் நான் தேடிய கருத்துச் சுதந்திரத்தை வெளியிடும் உரிமை வழங்குவதிலும், மக்களை மக்களாக, மனிதர்களாக நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் தாங்கள் வெளியிடும் படைப்புகள் அனைத்தும் அருமை. அதுவும் அரசனேயானாலும் முகத்திற்கு முன்னே ஆட்காட்டி விரலை நீட்டி எதற்கும் அஞ்சாமல் துணிவோடு நீங்கள் மக்கள் மன்றத்தின் முன்னிறுத்தி வைக்கும் எந்தச் செய்தியானாலும், கட்டுரையானாலும் எப்பேர்ப்பட்ட அயோக்கியனையும் நடுங்கச் செய்யும் விதமும்... அதைத் தட்டிக் கேட்டு உறுதி குலையாமல் நிற்கும் நெஞ்சுரத்தைக் கண்டு பெருமையாக இருக்கிறது. என்னதான் மற்ற பத்திரிகைகள் செய்தி வெளியிட்டாலும் ஏதோவொன்று அந்தப் பத்திரிகைகள் சொல்லத் தவறியன என்று, தங்கள் பத்திரிகையைப் படித்ததன் மூலம் தெரிந்து கொண்டேன்.

**— பவானி ராஜரத்னம்,**
**திருச்சி.**

✍ ஏழை, பணக்கார நாடுகள் என்ற வேறுபாடின்றி உலகத் தொழிலாளிகளின் போராட்டம் பற்றிப் படர்ந்து வருவதை சுவீடன் மக்களின் போராட்டம் தெளிவுபடுத்தியது. ''ஒரு வெளிநாட்டுப் புரட்சிகர இலக்கியத்தைப் படித்ததைப் போல உந்துதல் ஏற்படுகிறது. அங்கும் நம்மைப் போலவே மக்கள் வீதிகளில் போராட்டம் நடத்துவதைப் படித்தவுடன் கண்ணீர் வந்துவிட்டது'' என்று ஒரு வாசகர் கூறினார்.

தனது ஆதிக்க நலன்களுக்காக அம்பேத்கரையும், பவுத்தத்தையும் தன்னுள் இழுத்து செரிக்க முயலும் பார்ப்பனியத்தின் சூழ்ச்சியைத் திரைகிழித்தது

**தொடர்ச்சி பின் அட்டை உள்புறம்**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 3
• ஆகஸ்ட் - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# மேலவளவு கொலைக்கு ஆயுள்தண்டனை! பூலான்தேவிக்கு மரணதண்டனை!

பாராளுமன்ற உறுப்பினர் பூலான்தேவி கொலை செய்யப்பட்ட செய்தியும், மேலவளவுக் கொலையாளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கும் தீர்ப்பு குறித்த செய்தியும் அடுத்தடுத்த நாட்களில் வெளி வந்துள்ளன. முந்தையது அழுகிப்போன இந்து சாதிய அமைப்பின் முடைநாற்றம்; பிந்தையது அதன்மீது போர்த்தப்பட்டிருக்கும் இந்திய ஜனநாயகம் எனும் பட்டுத்துணியின் நம்பிக்கையூட்டும் தோற்றம். சாதி ஆதிக்க வெறியர்களைச் சட்டப்பூர்வமான வழியில் தண்டித்துவிட முடியும் என்ற மாயையை மேலவளவு தீர்ப்பு ஒருவேளை உருவாக்குமானால், அவ்வாறு உருவாகுமுன்பே அதனைத் தகர்த்துவிட்டது பூலான்தேவி கொலை செய்யப்பட்டச் சம்பவம். தனது வாழ்க்கை லட்சியம் நிறைவேறிவிட்டதாக அறிவித்திருக்கிறான், பூலான்தேவியைக் கொன்ற தாகூர் சாதி வெறியன். 11 ஆண்டு சிறைத் தண்டனையை பூலான்தேவி அனுபவித்திருந்தபோதும் தாகூர் சாதியினரால் பெஹ்மாயை மறக்கவோ, பூலானை மன்னிக்கவோ முடியவில்லை. கொல்லப்பட்டவர்களின் நினைவிடத்தில் விளக்கேற்றி வைத்தும் வானத்தில் துப்பாக்கியால் சுட்டும் பூலான்தேவியின் மரணத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள் பெஹ்மாய் கிராமத்தின் தாகூர்கள்.

படகு வலிக்கும் 'தாழ்ந்த' சாதியில் பிறந்து, திருமணம் என்ற பெயரில் 11 வயதிலேயே பாலியல் வன்முறைக்கு ஆளாகி, பின்னர் தாகூர் சாதிக் கொள்ளைக் கூட்டத்தின் மிருகத்தனமான பாலியல் வன்புணர்ச்சிக்கு இரையாகி, பெஹ்மாய் கிராமத்தில் பட்டப் பகலில் அம்மணமாக ஊர்வலம் விடப்பட்ட பூலான்தேவி என்ற பெண், பின்னர் வேறொரு கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்ததும், பெஹ்மாய் கிராமத்தின் இருபது தாகூர் ஆண்களைச் சுட்டுக் கொன்றதும், சரணடைந்து 11 ஆண்டுகள் சிறையிலிருந்து, பின்னர் விடுவிக்கப்பட்டு சமாஜ்வாதி கட்சியில் இணைந்து பாராளுமன்ற உறுப்பினரானதும் பூலான்தேவியின் கதை.

பூலான்தேவியைத் தாகூர் சாதிவெறியன் இப்போது கொலை செய்திருப்பதற்கும், பூலான்தேவி தாகூர்களைக் கொன்றதற்கும் கணக்கு சரியாகிவிடவில்லை. இரண்டு கொலைகளுக்குமான காரணத்தில் அடிப்படையான வேறுபாடு இருக்கிறது. பூலான் தேவி செய்த கொலை என்பது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை அவ்வளவுதான். ஆனால் இது வெறும் பழிவாங்கும் நடவடிக்கையல்ல; "கீழ்சாதியைச் சேர்ந்த, கேவலம் ஒரு பெண், ராஜபுத்திரர்களைக் கொன்றுவிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராகப் பவனி வருகிறாள்" என்பதை எண்ணும்போதெல்லாம் துடிக்கும் சத்திரிய குல கவுரவம்தான் பூலான் தேவியைக் கொன்றிருக்கிறது. நைச்சியமாக இந்த உண்மையை இருட்டடிப்பு செய்துவிட்டு, "என்ன செய்வது... வாளெடுத்தவன் வாளால் மடிவான்" என்ற கழிவிரக்கம் தொனிக்க எழுதுகின்றன பத்திரிகைகள்.

மேலவளவு முருகேசன் வாளெடுக்கவில்லை. இந்திய 'ஜனநாயகம்' அனுமதித்த தாழ்த்தப்பட்டோருக்கான தனித் தொகுதியில் பஞ்சாயத்துத் தலைவராகப் போட்டியிட்டு வென்ற குற்றத்திற்காக வாளால் மடிந்தார். தேவர் சாதி வெறியர்கள் குல கவுரவத்தை நிலைநாட்டுவதற்காகச் செய்த கொலைதான் இதுவும். கொலைக்கான காரணம் உலகத்துக்கே தெளிவாகத் தெரிந்தபோதும் "குப்பன் சுப்பனை வெட்டிக் கொன்றால்" எப்படி வழக்கு பதிவு செய்யப்படுமோ அப்படித்தான் வழக்குப் பதிவு செய்திருக்கிறது காவல் துறை. கொலை (பிரிவு-302), கும்பலாகச் சென்று தாக்குவது (34), பயங்கர ஆயுதங்களுடன் கலகம் செய்வது (148) ஆகிய குற்றச்சாட்டுகளுக்குத்தான் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. படுகொலைக்கு அடிப்படைக் காரணமான தீண்டாமைக்குரிய குற்றப்பிரிவு தந்திரமாக நீக்கப்பட்டுவிட்டது.

தண்டனையின் அளவை வைத்துக் குற்றத்தின் கொடூரமான தன்மையை மதிப்பிடலாமெனில், இத்தீர்ப்பின்படி பிரேமானந்தாவும் ஜான் பிரிட்டோவும் செய்த கொலைகளைக் காட்டிலும் தீண்டாமைக் கொலை சாதாரணமானது. இந்தத் தண்டனை சாதிவெறியர்களை அச்சுறுத்தவுமில்லை; பாதிக்கப்பட்ட மக்களை ஆனந்தப்படச் செய்யவுமில்லை. ஒருவேளை இந்த 'நீதி'யாவது கிடைத்ததே என்று மேலவளவின் தாழ்த்தப்பட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. "மேல வளவின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த வட்டாரத்திலேயே யாரும் வேலை தரக் கூடாது" என்ற சாதிக்கட்டுப்பாடு, கடந்த நான்கு ஆண்டுகளாக அங்கே கடுமையாக அமல்படுத்தப்படுகிறது. நிலமில்லாத ஏழைகளான தாழ்த்தப்பட்ட விவசாயிகள், வேலை தேடி வெளிமாநிலங்களுக்கு ஓடும் நிலைதான் இந்தக்கனம் வரை அங்கே நீடிக்கிறது.

பூலான்தேவியின் படுகொலைக்கும் மேலவளவு தீர்ப்புக்கும் இடைவெளி ஒரு நாள்தான். ஆனால் நீதியில் பெஹ்மாய்க்கும் மேலவளவுக்குமான இடைவெளி ஒரு காதம்.

படிப்பகம்

www.padippakam.com




அட்டைப்படக் கட்டுரை

# வேலையற்றவர்களா? தேவையற்றவர்களா?

**வே**லை கேட்டு குடிநீர்க்கடை வாசலில் நின்றிருந்த அந்த இளைஞனுக்கு 18 வயதிருக்கலாம். கருத்த ஒடிசலான தேகம். அழுத்தக்காரன் என்று சொல்லும்படியான முகம். பரிதாப உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் வகையில் கைகட்டி நின்றிருந்தான். முதல் சுற்று விசாரணையை முடித்த டீ மாஸ்டர் தனது முடிவுகளை அறிவித்துக் கொண்டிருந்தார்.

''ஊர்ல ஆடு மேச்சுகிட்டிருந்திருக்கான். ரெண்டு ஆட்டை களவாண்டு வித்துபுட்டு மெட்ராசுக்கு ஓடியாந்துட்டான். மூழியப் பார்த்தாலே தெரியுதே. இங்கியாவது ஒழுங்கா வேலை பாப்பியா. கல்லாவுல கை வுடுவியா?''

''இல்லண்ணே. அப்படியெல்லாம் இல்லண்ணே.''

''என்ன நொள்ளண்ணே. எல்லாம் நடிப்பு. 10 நாள் சோறு தின்னு உடம்பு கறி வச்சுடுச்சின்னா அப்புறமில்ல பாக்கணும் இவனுக திமிரை. சரி சரி... போய்ட்டு சாயங்காலம் வந்து மொதலாளியப் பாரு.''

ஒரு 15 நிமிடம் பிச்சைக்காரனைப் போல அங்கேயே நின்றுவிட்டு பிறகு மீண்டும் விரட்டப்பட்ட பின் மெல்ல அங்கிருந்து நகர்ந்தான் அந்த இளைஞன்.

வேலைக்காகவோ அல்லது மாஸ்டர் போட்டுக் கொடுத்த ஒரு குவளைத் தேநீருக்காகவோ, மொத்தத்தில் வயிற்றுக்காக செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளும் படியும், தன்மானமிழந்து நிற்கும்படியும் அவன் **நிர்ப்பந்திக்கப்படுவது** பளிச்செனத் தெரிந்தது.

**வே**லையில்லாத் திண்டாட்டம் பற்றி முதலாளித்துவ வர்க்கம் என்ன கருதுகிறது என்பதை விளக்க 1787-இல் டவுன்சென்டு என்ற பாதிரியாரின் இரக்கமற்ற சொற்களை தனது மூலதனம் நூலில் மேற்கோள் காட்டுகிறார் மார்க்ஸ்:

''பட்டினியானது ஓசைப்படாமல், அமைதியாக விடாப்பிடியாகத் தொழிலாளர்களை **நிர்ப்பந்திக்கிறது;** முயற்சிக்கும் உழைப்புக்கும் மிக இயற்கையான தூண்டுதலாக இருந்து அவர்களை முழு மூச்சாய்ப் பாடுபட வைக்கிறது.''

பட்டினி உழைப்பதற்கு மட்டுமா தூண்டுகிறது? செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி அந்த இளைஞனை நிர்ப்பந்திக்கிறது. பிறகு ''அந்தக் குற்றத்தைச் செய்தால்தான் என்ன'' என்று சிந்திக்கவும் தூண்டுகிறது.

தன்மானமிழந்து கைகட்டி நிற்க வைக்கிறது; பிறகு ''மானம் அவமானம் பார்த்தால் வாழ முடியாது'' என்று அவனையே பேச வைக்கிறது.

உழைப்பை விற்று வாழ முடியாத கட்டிடத் தொழிலாளி உடலை விற்று வாழும்படி நிர்பந்திக்கப்படுகிறான். பெண்டாட்டி பிள்ளைகள் பட்டினி கிடப்பதைக் காணப் பொறுக்காத கணவன் அவர்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களையும் கொன்று தானும் தற்கொலை செய்து கொள்கிறான்.

பாதிரியார் மெச்சுகின்ற பட்டினி எனும் ''இயற்கையான தூண்டுதல்'' மனிதனை அவனுடைய இயற்கையான நிலைக்கு - விலங்குநிலைக்கு - தள்ளுகிறது.

200 ஆண்டுகளுக்குப் பின் பாதிரியாரின் கூற்றை அப்படியே வழிமொழிகிறார் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா. இருநூறு ஆண்டுகளில் தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற குறைந்தபட்ச ஊதியம், பணிப் பாதுகாப்பு, வேலை நேரம் ஆகியவை குறித்த அனைத்து உரிமைகளையும் ரத்து செய்வதன் மூலம்தான் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும் என்கிறார்.

அதாவது நாளைக்கு வேலை உண்டா, கூலி உண்டா என்ற நிச்சயமில்லாத நிலையை, பட்டினி குறித்த பீதியை தொழிலாளி வர்க்கத்தின் மனதில் விதைப்பதன் மூலம்தான் அவர்கள் 'இயற்கையாகவே' முழுமூச்சாய்ப் பாடுபடுவார்கள் என்கிறார்.

''ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை'' என்று வாக்குறுதி தந்த பாரதீய ஜனதாக் கட்சி, அத்தகைய வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டுமானால், ''வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கும் உரிமை'' (நினைத்தவுடன் வேலை நீக்கம் செய்யும் உரிமை) முதலாளிகளுக்கு வழங்கப்படவேண்டும் என்று முன் நிபந்தனை விதிக்கிறது.

தனியார்மயம் - தாராளமயத்தால் தங்களுக்கு ஒன்றும் நேர்ந்துவிடப் போவதில்லை என்று இறுமாந்திருந்த அரசுத் துறை ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆபத்து இப்போதுதான் மெல்ல உரைக்கத் தொடங்கியிருக்கிறது. ஜூலை



படிப்பகம்

www.padippakam.com

27-ம் தேதி அனைத்திந்திய தொழிற்சங்கங்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் அறிவித்திருக்கின்றன.

வேலையில் இருப்பவர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம். வேலையில்லாதவர்கள் எதை நிறுத்துவது?

• ○ •

புதிய பொருளாதாரக் கொள்கை அறிவிக்கப்பட்டபின், குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளில் இதுவரை காணாத வேலையின்மை அபாயம் பெருகியிருப்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகளே அச்சுறுத்துகின்றன.

பத்திரிகைகளில் வெளிவரும் வேலைவாய்ப்பு விளம்பரங்கள் 60% குறைந்துவிட்டன. ''ரயில்வேயில் 5000 வேலை, வங்கியில் 2000 வேலை'' என்று பெட்டிக்கடைகளில் தொங்கும் விளம்பரங்களைக் காணமுடிவதில்லை. பொதுத்துறை வங்கிகளில் சென்ற ஆண்டில் மட்டும் சுமார் ஒரு லட்சம் ஊழியர்கள் விருப்ப ஓய்வில் சென்றுள்ளனர். வெளியேறியவர்களது வேலைச் சுமையை இருப்பவர்கள் சுமக்கிறார்கள்.

1990-இல் இரயில்வே ஊழியர்களது எண்ணிக்கை 18 லட்சம். இன்று 15.8 லட்சம். 1980 முதல் 94 வரை மத்திய மாநில அரசுகள் மொத்தம் 30 லட்சம் பேரை வேலைக்கு அமர்த்தினர். ஆனால் கடந்த பத்தாண்டுகளில் ஆளெடுப்பு இல்லை. விதிவிலக்காகச் சில துறைகளில் இருந்தாலும் அது மிகக் குறைவு.

1994-ஆம் ஆண்டு கணக்கின்படி நாடு முழுவதும் உள்ள மத்திய மாநில அரசு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1.9 கோடி. அடுத்த 7 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை உயரவில்லை. மாறாக, இவர்களில் 20 லட்சம் பேரை உடனே வீட்டுக்கு அனுப்புவது எப்படி என்பதற்குத் திட்டம் தீட்டுகிறார் நிதியமைச்சர்.

மத்திய மாநில அரசுகளுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் பணியாற்றுவோரின் மொத்த எண்ணிக்கை 37 லட்சம். இவற்றில் நலிவுற்றவை என்று அறிவிக்கப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர்கள் மட்டும் 18 லட்சம். அதாவது சரிபாதி தொழிலாளர்களின் தலைக்கு மேலே கத்தி தொங்குகிறது.

அரசுத்துறை மட்டுமல்ல, தனியார் துறையில் பெரிய தரகு முதலாளித்துவப் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் அனைத்தும் ஆட்குறைப்பு செய்கின்றன.

சமீப ஆண்டுகளில் மட்டும் இந்துஸ்தான் லீவர் 10,000 தொழிலாளர்களையும், டாடா இரும்பு எஃகு நிறுவனம்

> ''ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை'' என்று வாககுறுதி தந்த பாரதீய ஜனதாக் கட்சி, அத்தகைய வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமானால், ''வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கும் உரிமை'' (நினைத்தவுடன் வேலை நீக்கம் செய்யும் உரிமை) முதலாளிகளுக்கு வழங்கப்படவேண்டும் என்று முன் நிபந்தனை விதிக்கிறது.

30,000 தொழிலாளர்களையும் வெளியேற்றியுள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்களோ 24 மணிநேர முன்னறிவிப்பு கூடக் கொடுக்காமல் ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் கொத்துக் கொத்தாக வெளியேற்றுகின்றன.

சிறுதொழில் துறையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். கிண்டி - அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள 2500 நிறுவனங்களில் 500 அதிகாரபூர்வமாக மூடப்பட்டு விட்டன. பல நிறுவனங்கள் செயல்படாமல் முடங்கியுள்ளன. பெங்களூரின் பீன்யா தொழிற்பேட்டையில் 3000 தொழிலகங்களில் 1000 மூடிக் கிடக்கின்றன. வடக்கே லூதியானா முதல் தெற்கே சிவகாசி வரை மூடப்பட்டுக் கிடக்கும் சிறு தொழில்கள் பல ஆயிரம். வேலையிழந்த தொழிலாளர்களோ பல லட்சம்.

இந்தியாவின் ஆகப் பெரும்பான்மையான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விவசாயமோ நலிந்து வருகிறது. நகரமயமாதல் தீவிரமடைந்து வருகிறது. இந்தப் பத்தாண்டின் இறுதிக்குள் நாட்டின் 50% சதவீத மக்கள்தொகை நகரங்களுக்கு வந்துவிடும் என்று எச்சரிக்கிறது ஒரு தனியார் ஆய்வு மையம்.

நாடு முழுவதுமுள்ள அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள படித்த இளைஞர்களின் எண்ணிக்கை 1999 புள்ளி விவரப்படி 4 கோடிப் பேர் என்கிறது அரசு. ஆனால் 1975 முதல் 1980-களின் பிற்பகுதி வரை உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற் கல்வி முடித்த மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமே 16 கோடி என்கிறது இன்னொரு புள்ளி விவரம்.

1991 முதல் 2000 வரையிலான பத்து ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தின் ஆண்டு வளர்ச்சி 6.4 சதவீதம். ஆனால் பொருளாதார 'வளர்ச்சிக்கு' இணையாக வேலைவாய்ப்பு வளரவில்லை. விவசாயத்தின் வேலைவாய்ப்பு குறைந்திருக்கிறது. உற்பத்தித் துறையில் ஆண்டுக்கு ஒரு சதவீதம்தான் வேலைவாய்ப்பு உயர்ந்துள்ளது. 1990-98-இல் 70 லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாகக் குற்றம் சாட்டுகிறார் எச்.எம்.எஸ். தொழிற்சங்கத்தின் அனைத்திந்தியச் செயலர்.

வேலையின்மை குறித்த இந்தப் புள்ளி விவரங்கள் நிலைமையைச் சித்தரிக்கும் புள்ளிகள் மட்டுமே. இந்தப் பொருளாதாரப் புள்ளிகளை இணைக்கும் வாழ்க்கை எனும் கோட்டுச் சித்திரமோ பட்டினிச்சாவு, தற்கொலை, விபச்சாரம், திருட்டு என்று விகாரமாகத் தோற்றம் தருகிறது.

சமூகத்தின் உணர்ச்சியை ஒரே சொல்லில் தெரிவிக்க வேண்டுமானால் **உத்திரவாதமின்மை** என்பதுதான் அந்தச் சொல். படிப்புக்கேற்ற வேலைக்கு உத்திரவாதமில்லை. எந்த வேலைக்கும் உத்திரவாதமில்லை; தொழிலாளிகள் ஆட்குறைப்பில் வெளியேற்றப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள்; சிறு தொழிலதிபர்களோ இறக்குமதிக் கொள்கையால் திவாலாகி விடுவோம் என்று அஞ்சுகிறார்கள்.

விளைபொருளுக்கு விலை கிடைக்குமா என்று விதைக்கும் போதே அஞ்சத் தொடங்குகிறார்கள் விவசாயிகள். ஏதுமற்ற உதிரித் தொழிலாளர்களோ விடியும் ஒவ்வொரு நாளையும் எண்ணிக் கலங்குகிறார்கள்.

முதலாளித்துவச் சிந்தனையாளர்கள் கூறுவதைப் போல ''இயற்கையிலேயே மனிதனுக்குள் இருக்கும் சொத்து சேர்க்கும் ஆசையோ'', ''தனது தனித்திறமைக்கு உரிய வெகுமதி தேடும் வேட்கையோ'' மக்களை இயக்கவில்லை.

''நாளைய சோற்றுக்கு என்ன செய்வோம்'' என்ற அச்சமே அமிலமாகி இன்று தின்ற சோற்றை எரித்து விடுகிறது. ''எதிர்காலத்தில் என்ன செய்வோம்'' என்ற பீதி இளைஞர்களின் நிகழ்காலத்தைத் தளரச் செய்து விடுகிறது.

பாதிரியார் கூறியதைப் போல பட்டினி குறித்த பீதிதான் 'இயற்கையான' தூண்டுத

அட்டை ஓவியம்
கோபி


படிப்பகம்

www.padippakam.com

**சமூகத்தின் உணர்ச்சியை ஒரே சொல்லில் தெரிவிக்க வேண்டுமானால் உத்திரவாதமின்மை என்பதுதான் அந்தச் சொல். படிப்புக்கேற்ற வேலைக்கு உத்திரவாதமில்லை. எந்த வேலைக்கும் உத்திரவாதமில்லை; தொழிலாளிகள் ஆட்குறைப்பில வெளியேற்றப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள்; சிறுதொழிலபதிகளோ இறக்குமதிக் கொள்கையால் திவாலாகி விடுவோம் என்று அஞ்சுகிறார்கள்.**

லாகி சமூகத்தை இயக்குகிறது. இந்தப் பீதி அதிகரிக்க அதிகரிக்க உயிர்வாழ்வதற்குப் போராடும் விலங்கின் நிலைக்கு மக்கள் தள்ளப்படுகிறார்கள்.

"ஒரு நாட்டின் நிகர உற்பத்தி 1991 - 2000 வரை சராசரியாக ஆண்டுக்கு 6% வளர்ச்சியடைந்திருக்கும்போது அதே காலகட்டத்தில் 70 லட்சம் பேர் வேலையிழந்திருப்பது முரண்பாடாக உள்ளதே! பொருளாதார வளர்ச்சி வேலை வாய்ப்பை அதிகரிக்கத் தானே செய்யும்" என்று கேள்வி எழுப்புகிறார்கள் சில முதலாளித்துவ அறிஞர்கள்.

"இது முரண்பாடல்ல, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விதியே இதுதான்" என்று தனது மூலதனம் நூலில் இப்புதிருக்கு விடையளித்திருக்கிறார் மார்க்ஸ்.

"உழைப்பாளி மக்கள் தாம் படைக்கும் மூலதனத்தின் திரட்டலை உண்டாக்குவதோடு, தாமே ஒப்பளவில் தேவைக்கு அதிகமானோராய் ஆக்கப்படுவதற்கான... சாதனங்களையும் படைக்கிறார்கள்... இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கே உரித்தான மக்கள் தொகை விதியாகும்."

மக்கள் தொகையின் வேலை வாய்ப்புத் தேவைக்கு ஏற்ப முதலாளித்துவம் தன்னைத் தகவமைத்துக் கொள்வதில்லை. மூலதனத்தின் தேவைக்குப் பொருத்தமாக மக்கள் தொகையைச் சரிசெய்து கொள்ளுமாறு நம்மை நிர்ப்பந்திக்கிறது.

எனவேதான் "வேலையில்லாதவர்கள்" என்று பொதுவாக அழைக்கப்படும் மக்களை **"உபரி மக்கள் தொகை"** என்று குறிப்பிடுகிறார் மார்க்ஸ்.

• o •

**வே**லையின்மை என்பது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பிரிக்கமுடியாத அங்கம். மிகவும் வளர்ச்சியடைந்த மேலை நாடுகள் 100% கல்வியறிவை எட்டியிருக்கலாம்; நூறு சதவீத வேலைவாய்ப்பை அவை என்றுமே எட்டுவதில்லை. உழைப்புச் சந்தையைக் கட்டுக்குள் வைக்க ஒரு குறிப்பிட்ட அளவு வேலையின்மை கட்டாயம் நிலவும்படி அரசே பார்த்துக் கொள்கின்றது.

மறுகாலனியாக்கக் கொள்கையில் சிக்குண்ட இந்தியா போன்ற விவசாய நாட்டிலோ "வேலையில்லாதவர்கள்" என்று பொதுவாக அழைக்கப்படும் மக்கள் வெவ்வேறு காரணங்களினால் வேலையில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

நவீன தொழில்நுட்பத்தினால் வெளியேற்றப்படும் ஆலைத் தொழிலாளர்கள், தாராள இறக்குமதிக் கொள்கையால் திவாலான சிறு தொழில் துறையின் தொழிலாளர்கள், பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போட முடியாமல் தோற்றுப் போன இந்தியத் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள், இவர்களுடன் படித்து வேலையில்லாத இளைஞர்களின் பட்டாளம் - இது முதல் பிரிவு.

புதிய பொருளாதாரக் கொள்கையால் திவாலாக்கப்பட்ட நடுத்தர - சிறு விவசாயிகள்; நசிந்து போன விவசாயத்தினால் வேலை இழந்த நிலமற்ற கூலி விவசாயிகள் - தொடர்ந்து கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி வந்து தினக்கூலிகளாகவும், முழு வேலை வாய்ப்பில்லாதவர்களாகவும் நகர்ப்புறத்தில் தவிப்பவர்கள் இரண்டாவது பிரிவு.

இறுதியாக, திக்கற்றவர்கள். முதியவர்கள், உழைக்கும் திறனற்றவர்கள், வேலையில்லாதோர் பட்டாளத்தின் அடியில் கசடு போலப் படிந்த பரம ஏழைகள். இவர்களை உழைக்கும் வர்க்கத்தின் மருத்துவமனை (நோயாளிகள்) என்று குறிப்பிடுகிறார் மார்க்ஸ்.

ஆகவே 'உற்பத்தி பெருகும்போது வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி அதிகரிக்க முடியும்' என்ற கேள்வி பொருளற்றது. உலக முதலாளித்துவத்தின் செல்வம் எந்த விகிதத்தில் அதிகரிக்கிறதோ அதே விகிதத்தில் நாதியற்றுப் போன ஏழைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கவே செய்யும்.

அதிகரித்து வரும் வேலையின்மை குறித்த கேள்விக்கு இந்தியத் தரகு முதலாளி **ஆனந்த் மகிந்த்ரா** வெளிப்படையாகப் பதிலளிக்கிறார்: "ஒரு சுத்திகரிப்பு நடக்கிறது; ஆனால் இந்த நிகழ்ச்சிப் போக்கின் மனித மதிப்பு அதிகமாக இருக்கிறது."

அதாவது "தற்கொலை, பசி - பட்டினிச் சாவு போன்ற காரணங்களால் உபரி மக்கள் தொகையின் ஒரு பகுதி மடிவதைத் தவிர்க்க இயலாது. ஏனெனில் உலக முதலாளித்துவத்துடன் இந்தியப் பொருளாதாரம் பிணைக்கப்பட்டு விட்டதால் உலகச் சந்தைக்குப் பயன்படாத மனிதக் கச்சாப் பொருள் மடிவதைத் தவிர வேறு வழியில்லை. சந்தையில் விற்க முடியாத அரிசியைப் போலவே, அதை வாங்க முடியாத மக்களும் மடிய வேண்டியதுதான்" என்பதே இதற்குப் பொருள்.

இதே கேள்விக்கு நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா வேறு விதமாகப் பதிலளிக்கிறார். உழைப்புச் சந்தை சுதந்திரமானதாக இல்லாததால்தான் வேலையின்மை அதிகரித்திருப்பதாகவும், அதனைச் சுதந்திரமானதாக ஆக்கிவிட்டால் உழைப்பை அதிகமாகக் கோரும் தொழில்களில் முதலாளிகள் மூலதனம் போடுவார்கள் என்றும், வேலையின்மைப் பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் தனது பட்ஜெட் உரையில் விளக்கமளிக்கிறார்.

உழைப்புச் சந்தையைச் சுதந்திரமானதாக ஆக்குவது என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுமுன் மூலதனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைப் பார்ப்போம்.

ஏற்றுமதி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது, தீர்வைகளை ரத்து செய்வது, ராணுவ உற்பத்தி உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் அந்நிய மூலதனத்தை அனுமதிப்பது, ஏகபோகத் தடைச் சட்டத்தை நீக்குவதன் மூலம் ஓரிரு பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு தொழில் துறையையே கட்டுப்படுத்த உரிமை வழங்குவது, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தை நீக்குவதன் மூலம் நகரத்தையே பணமுதலைகள் பங்கு போட்டுக் கொள்ள அனுமதிப்பது, கிராமப்புற உச்சவரம்பை நீக்குவதன் மூலம் பன்னாட்டுத் தொழிற் கழகங்கள் விவசாய நிலத்தை பல்லாயிரம் ஏக்கர் வளைத்துப் போட வழிவகை செய்வது, சிறு தொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட தீப்பெட்டி போன்ற உற்பத்தித் துறைகளை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிடுவது... போன்றவையெல்லாம் மூலதனச் சந்தையைச் சுதந்திரமாக்கும் நடவடிக்கைகள்.

மூலதனச் சந்தையின் சுதந்திரம் சிறு தொழில் முனைவோரையும் சிறு விவசாயிகளையும் திவாலாக்கி அவர்களை வேலை தேட வைத்திருக்கிறது. அவர்களிடம் வேலை செய்த தொழிலாளிகளையும், கூலி விவசாயிகளையும் திக்கற்றவர்க



படிப்பகம்

www.padippakam.com

ளாக்கிப் பட்டினிக்குத் தள்ளியிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் சிறு உடைமையாளர்களை திவாலாக்குவதன் மூலம் உழைப்புச் சந்தையில் உபரி மக்கள் தொகையை, வேலையில்லாதோரின் புதிய தொரு சேமப் பட்டாளத்தை உருவாக்கியி ருக்கிறது.

உழைப்புச் சந்தையைச் சுதந்திர மாக்கும் நடவடிக்கைகள் என்ன?

'ஒரு தொழில் நிறுவனத்தில் தொடர்ந்து ஒரே வேலையைச் செய்து வரு கின்ற தொழிலாளியைக் குறிப்பிட்ட காலத் திற்கு மேல் ஒப்பந்தக் கூலியாக (Contract Labour) வைத்துக் கொள்ள முடியாது; அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்' என்ற சட்டத்தை ரத்து செய்து அவர்களைக் காலம் பூராவும் தினக்கூலியா கவே வைத்திருக்க வகை செய்வது.

'100 தொழிலாளர்கள் / ஊழியர்க ளுக்கு மேல் வேலைபார்க்கும் தொழில் நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்ய வேண்டுமானால் முன் அனுமதி பெற வேண்டும்' என்ற சட்டத்தை ரத்து செய்து 1000 பேர் வரை வேலை பார்க்கும் தொழில் நிறுவனங்களில் கூட நினைத்த மாத்திரத்தில் தொழிலாளியை வேலை நீக்கம் செய்யும் உரிமையை முதலாளிக்கு வழங்குவது.

இவை உழைப்புச் சந்தையைச் சுதந்திர மாக்கும் சட்டத்திருத்தங்களில் முக்கியமா னவை.

இதன் விளைவாக உழைப்புச் சந்தையில் தோன்றியிருக்கும் கடும்போட் டியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்ப டுத்திக் கொள்ளும் வாய்ப்பினை "உழைப்புச் சந்தையைச் சுதந்திரமாக்கும் நடவடிக்கை" ஏகபோக முதலாளி வர்க்கத்துக்கு வழங்கியிருக்கிறது.

> 'உற்பத்தி பெருகும் போது வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி அதிகரிக்க முடியும்' என்ற கேள்வி பொருளற்றது. உலக முதலாளித்து வத்தின் செல்வம் எந்த விகிதத்தில் அதிகரிக்கி றதோ அதே விகிதத்தில் நாதியற்றுப் போன ஏழை களின் எண்ணிக்கையும் அதிகரிக்கவே செய்யும்.

> "ஒரு நாளைக்கு 2 கிலோ கோதுமையைக் கூலியாகக் கொடுங்கள் சாலை போடுகிறோம், குளம் வெட்டுகிறோம், பாலம் கட்டுகிறோம்" என்று இந்திய உணவுக் கழகக் கிட்டங்கியின் வாசலில் ராஜஸ்தான் மக்கள் உண்ணாவிரத மிருக்கிறார்கள். தானியம் புழுத்துப் போகிறது. அதைத் தின்று விட்டு உழைக்க மக்கள் கூட்டம் தயாராக இருக்கிறது. ஆனால் இந்த மலிவான உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள அரசே தயாராக இல்லை.

குறைந்த கூலிக்கு வேலை செய்யத் தயாராகக் கோடிக்கணக்கான மக்கள் அலைமோதும் இந்த நிலைமைதான் தொழில் வளர்ச்சியையும் வேலை வாய்ப் பையும் உருவாக்கும் என்கிறார் நிதிய மைச்சர். இது குரூரமாக இருந்த போதிலும் உண்மையாகவாவது இருக்கிறதா என்றால் இல்லை.

தோட்டத் தொழிலாளிகளின் தினக் கூலி 80-இலிருந்து 20 ரூபாய்க்கு விழுந்த தனால் தேயிலை உற்பத்தி வளர்ந்துவிட வில்லை; கட்டிடத் தொழிலாளிகளின் கூலி 100-இலிருந்து 60-க்கு விழுந்துவிட் டதால் ரியல் எஸ்டேட் தொழில் சூடுபிடிக் கவில்லை. அவ்வளவு ஏன்? "ஒரு நாளைக்கு 2 கிலோ கோதுமையைக் கூலி யாகக் கொடுங்கள் சாலை போடுகிறோம், குளம் வெட்டுகிறோம், பாலம் கட்டு கிறோம்" என்று இந்திய உணவுக் கழகக் கிட்டங்கியின் வாசலில் ராஜஸ்தான் மக்கள் உண்ணாவிரதமிருக்கிறார்கள். தானியம் புழுத்துப் போகிறது. அதைத் தின்று விட்டு உழைக்க மக்கள் கூட்டம் தயாராக இருக்கிறது. ஆனால் இந்த மலி வான உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள அரசே தயாராக இல்லை.

குறைந்த கூலியைப் பயன்படுத்திச் சுரண்டுவதை ஏகபோக முதலாளிகள் ஏற்க னவே தடையின்றிச் செய்து வருகிறார்கள். ரிலையன்ஸ் டெக்ஸ்டைல்ஸின் துணிகள் பிவாண்டியின் விசைத்தறிகளில் தயாரா கின்றன. இந்துஸ்தான் லீவரின் நுகர்பொ ருட்கள் நாடெங்குமுள்ள சிறு தொழிற்சா லைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1990-இல் 1234 கோடியாக இருந்த இந்துஸ்தான் லீவரின் ஆண்டு விற்பனை 1999-இல் 10,142 கோடியாக உயர்ந்துள் ளது. லாபமும் 20 மடங்கு பெருகியுள்ளது. ஆனால் இதே காலத்தில்தான் 10,000 நிரந் தரத் தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டுத் தொழிற்கழகங்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அனைத்திலும் இதுதான் நிலைமை. 1997-98 புள்ளிவிவ ரப்படி இந்தியாவின் பெரும் தொழில் நிறு வனங்கள் தமது மொத்த விற்பனை தொகையில் (Sales) 5.2 சதவீதத்தைத்தா தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களு கான ஊதியமாகக் கொடுத்துள்ளனர் ஆனால் விளம்பரத்திற்கோ 8 சதவீத செலவு செய்துள்ளனர்.

எனவே உழைப்பைப் பயன்படுத்தி கொள்வதா அல்லது நவீன தொழில்நு பத்தைப் புகுத்துவதா என்பது கூலியின் அளவை வைத்து முடிவு செய்யப்படு தில்லை. முதலாளிகளின் வர்க்க தன்மைதான் அதைத் தீர்மானிக்கிறது.

சாலை போடுவது உள்ளூர் காண்டிரா கடரா, லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனம என்பதைப் பொறுத்துத்தான் வேலை செய்யவிருப்பது எந்திரமா தொழிலாள களா என்பது தீர்மானிக்கப்படுகிறது.

சொந்தக் காசை மூலதனமாக போட்டு, உள்நாட்டுத் தொழில்நுட்ப தையும் உள்நாட்டுச் சந்தையையும் நம்பி தொழில் நடத்தும் தேசிய முதலாளிகளி தொழில் நிறுவனங்கள்தான் ஒப்பீட் ளவில் மிக அதிகமான தொழிலாளர் ளுக்கு வேலைவாய்ப்பை வழங் முடியும். வேலை வாய்ப்புப் புள்ளி வி ரங்கள் காட்டும் உண்மையும் அதுதான்.

ஆனால், உழைப்புச் சந்தையைச் சு திரமாக்குவதன் மூலம் வேலைவாய்ப்ப அதிகரிக்கப் போவதாக பட்ஜெ உரையில் கூறிய நிதியமைச்சர், தன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்க கூட்டத்தில் வேறொன்றைக் கூறினா ஆகப் பெரும்பான்மையான தொழிலாள களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடி உள்நாட்டு, சிறுதொழில் துறை பன்னாட் நிறுவனங்களால் 'ஒழித்துக் கட்டப்படுவது தவிர்க்கவியலாதது என்றார்.

"உழைப்புச் சந்தையின் சுதந்திரம் என்ற சொல், "மூலதனத்தின் சுதந்திரம் என்பதைக் குறிக்கும் சங்கேதச் சொல்தா என்பது நிரூபணமாகிவிட்டது.

இவ்வாறு உலக மூலதனத்தின் ஆட் உறுதி செய்யப்பட்டுவிட்டது. இரு பினும் தனது ஆட்சி தொடரவேண்டு என்ற கவலை காரணமாக பா.ஜனதா அ



படிப்பகம்

www.padippakam.com

''விரிவான வேலை வாய்ப்பை உருவாக்கும் வழிமுறைகளைக் கண்டறிய'' கமிசன் ஒன்றை நியமித்தது. தேவாரத்தின் தலைமையில் மனித உரிமைக் கமிசன் அமைப்பதைப் போல, ஐ.எம்.எஃ.பில் பதவியேற்கவிருக்கும் மான்டேக் சிங் அலுவாலியாவின் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டது.

''வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை பிரச்சினையில்லை; வேலை தேடுவோரின் தரம்தான் பிரச்சினை'' என்று கூறுகிறது அந்தக் குழு. அதாவது, ஏற்கனவே பள்ளி இறுதி முடித்தவர்கள், பி.ஏ. எம்.ஏ. எம்.எஸ்.சி., பி.எல்., தொழிற்கல்வி, பொறியியல் இன்ன பிற பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கும் பட்டதாரிகள் எத்தனை கோடிப் பேர் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. பன்னாட்டு நிறுவனங்களின் இன்றைய தேவைக்குப் பயன்படும்படியான உலகத்தரம் வாய்ந்த வல்லுநர்களை உருவாக்குவதுதான் பிரச்சினை என்கிறார் அலுவாலியா.

வேலையில்லாதவர்களின் தேவையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு, உலக மூலதனத்தின் தேவையை ஆராய்கிறது. பட்டதாரிகளே தேவையில்லாதவர்கள் என்று ஆன பின்னால், படிக்காத பாமர உழைக்கும் மக்களின் கதியை என்ன சொல்வது?

அடுத்த பத்தாண்டுகளில் விவசாயத்திலும் தொழில்துறையிலும் வேலை வாய்ப்பு அதிகமிருக்காது என்றும் சேவைத்துறைதான் 70 சதவீத வேலை வாய்ப்பை வழங்கும் என்றும் கூறுகிறார் அலுவாலியா.

அலுவாலியாவின் மூதாதையரான ஆடம் ஸ்மித் எனும் ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர் சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் கீழ்க்கண்டவாறு கூறினார்:

''அதிகமான தொழிலாளர்களை (உற்பத்தியாளர்களை) வேலைக்கு வைத்துக் கொள்வதன் மூலம் ஒரு மனிதன் பணக்காரனாகிறான். அதிகமான வேலையாட்களை வைத்துக் கொள்வதன் மூலம் அவன் ஏழையாகிறான்.''

சமையல்காரன், தோட்டக்காரன், குதிரை வண்டிக்காரன் போன்ற வேலையாட்களின் உழைப்பு, ஆலைத் தொழிலாளியின் உழைப்பைப் போல நேரடியாக மூலதனமாக மாற்ற முடியாதது என்பதால், பழைய பிரபுத்துவ பாணியில் வேலையாட்களை வைத்திருக்கும் முதலாளிகளை இப்படிச் சாடுகிறார் ஆடம் ஸ்மித்.

எல்லாச் சேவைகளும் பண்டமாகவும், மனிதனுக்கு மனிதன் செய்து கொள்ளக் கூடிய உதவிகள் கூட 'சேவை'களாகவும் மாற்றப்பட்டுவிட்ட காலம் இது.

சேவைத்துறையில் வேலைவாய்ப்பு என்று அலுவாலியா கூறுவதைக் கேட்டு தொலைபேசி, ரயில்வே, போக்குவரத்து, மின்சாம், வங்கி போன்ற சேவைத்துறைகளில் வேலைவாய்ப்பு பெருகப் போவதாகக் கனவு காணவேண்டாம். தனியார்மயம், நவீனமயம், உலகமயத்தால் ஆட்குறைப்பு நடந்து கொண்டிருக்கும் துறைகள் அவை.

மேலும் தண்ணீரும் காற்றும் விற்கத்தக்க பண்டமாக மாறிவிட்ட பொருளாதாரத்தில் பொருள் விற்பனையையும், சேவை விற்பனையையும் பிரித்தறிவது கடினம்.

எனினும் இந்தச் சேவைத்துறைப் பொருளாதாரத்தை இப்படி எளிமையாக வரையறுக்கலாம். உலகின் 10 முதல் 20 சதவீதமே உள்ள பணக்கார, மேட்டுக்குடி, வர்க்கங்களுக்கு மீதமுள்ள 80 சதவீத மக்கள் சேவை செய்து கூலியைப் பெற்றுக் கொள்ளும் துறைதான் சேவைத்துறை.

**இடுப்பில் துண்டைக் கட்டிய படிப்பறிவற்ற வேலைக்காரர்களிடத்தில், கழுத்தில் டை கட்டிய படித்த வேலைக்காரர்களை உருவாக்குவது தான் இந்தச் சேவைப் பொருளாதாரம். இந்தச் சேவைத்துறை வேலை வாய்ப்பு நீடிக்க வேண்டுமானால், இச்சேவைகளை அனுபவிக்கின்ற பணக்கார வர்க்கம் மேலும் செழிப்பாக நீடிக்க வேண்டும்.**

மன்னர்களும், ஜமீன்தார்களும் கூட அனுபவித்திராத சொகுசுகளையும் சேவைகளையும் இந்த மேட்டுக்குடி வர்க்கத்துக்கு வழங்குகின்ற துறை இது.

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் வாயிலில் காக்கிச் சட்டை அணிந்து நிற்கும் செக்யூரிட்டி நிறுவனத்தின் வேலையாட்கள், வீடு - அலுவலகங்களைச் சுத்தம் செய்யும் நிறுவனங்கள், வீட்டு வேலைக்காரர்களை சப்ளை செய்யும் நிறுவனங்கள், மசாஜ் பார்லர்கள், அழகு நிலையங்கள், ஃபாஷன் ஆடை அலங்கார நிறுவனங்கள், தொலைபேசியில் சொன்னவுடன் வீட்டுக்கு உணவு முதல் அனைத்தையும் கொண்டு வந்து தரும் நிறுவனங்கள்...

நட்சத்திர விடுதிகள், நடன அரங்குகள் விளையாட்டு அரங்குகள், நீச்சல் குளங்கள் இவற்றைப் பராமரிக்கும் நிறுவனங்கள், நகரைத் துப்புரவு செய்யும் நிறுவனங்கள், செடி வளர்த்துத் தரும் நர்சரிகள், தோட்டப் பராமரிப்பு நிறுவனங்கள், வெளிநாட்டு வங்கிகளிடம் கடன் வாங்கத் தூண்டும் பிரதிநிதிகள், கடன் வசூல் செய்யும் அடியாட்கள்... இன்னும் பட்டியலிட்டு மாளாத ஆயிரக்கணக்கான சேவைத் தொழில்கள் தான் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கப் போகின்றன என்கிறார்கள். இவற்றையும் இவற்றையொத்த பல சேவைகளையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் சேவைத்துறை என்பதில் அடங்கும்.

இந்தச் சேவைத்துறைக்கேற்ற கல்வியையும் பயிற்சியையும் வழங்கும் நிறுவனங்கள் இதற்குத்தான் எதிர்காலம் என்று மாணவர்களைக் கூவிக் கூவி அழைக்கின்றன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் முதல் கட்டிட உள் அலங்காரம், மேக்கப் கலை, பாஷன் வடிவமைப்பு, நகை செய்தல், நட்சத்திர சமையல் கலை, ஓட்டல் நிர்வாகம், சுற்றுலா நிர்வாகம் எனப் பல்வேறு ''சேவைத்துறை தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள்'' சென்னையைச் சுற்றி மட்டுமே 10,000-த்திற்கு மேல் செயல்படுவதாகக் கூறுகிறது **பிரண்ட்லைன்** ஆங்கில ஏடு.

இடுப்பில் துண்டைக் கட்டிய படிப்பறிவற்ற வேலைக்காரர்களிடத்தில், கழுத்தில் டை கட்டிய படித்த வேலைக்காரர்களை உருவாக்குவதுதான் இந்தச் சேவைப் பொருளாதாரம். இந்தச் சேவைத்துறை வேலை வாய்ப்பு நீடிக்க வேண்டுமானால், இச்சேவைகளை அனுபவிக்கின்ற பணக்கார வர்க்கம் மேலும் செழிப்பாக நீடிக்க வேண்டும்.

செல்வச் செழிப்பு அதிகரித்தால் அதே விகிதத்தில் வேலையற்றவர்களின் பட்டாளமும், திக்கற்ற மக்களின் பட்டாளமும் அதிகரிக்கும் என்பதுதான் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வரலாறு நமக்குக் கற்றுத் தந்திருக்கும் பாடம்.

இது ஒரு விஷச்சுழல். உலக முதலாளித்துவத்தையும், அதன் உள்நாட்டுத் தரகர்களையும் ஒழிக்காமல் இந்த விஷச் சுழலிலிருந்து நாம் விடுபட முடியாது. சோற்றுக்கு வழிதேட நமக்கு ஏதேனும் ஒரு வேலை அவசியம்தான். ஆனால் சுதந்திரத்திற்கு வழிதேடும் வேலையை - புரட்சியை - நாம் உடனே தெரிவு செய்து கொள்ள முடியும். அதற்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் முன் காத்து நிற்கத் தேவையில்லை.

• மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

பின் அட்டைப்படக் கட்டுரை :

# இத்தாலி - ஜெனோவா நகரில் ஜி-8 எனப்படும் அமெரிக்கா தலைமையிலான வல்லரசு நாடுகளை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்கள் போர்!

உலக மயமாதல் என்ற நிகழ்ச்சி நிரலை வைத்து எங்கெல்லாம் உலக முதலாளிகளும், அவர்களின் அரசாங்கப் பிரதிநிதிகளும் கூடுகிறார்களோ அங்கெல்லாம் தொழிலாளர்களும் கூடுகிறார்கள்; தங்கள் எதிர்ப்பை ஆர்ப்பாட்டங்களாக்கி ''உன் சவக்குழி என் கையில்தான்'' என்று சொல்கிறார்கள். சியாட்டிலில் தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள் கோதன்பர்க், கியூபெக் என்று வளர்ந்து இத்தாலியில் உள்ள துறைமுக நகரமான ஜெனோவாவில் தீவிரமடைந்துள்ளது.

எதிரிகளும் பலத்த தற்பாதுகாப்போடு தங்கள் சந்திப்பைத் தொடங்கினார்கள். ஜெனோவாவையே ஒரு பெரும் சிறையாக மாற்றி, மக்களின் இயக்கத்தை ஒரு வாரம் முடக்கி, கூட்டம் நடந்த பகுதியை சிவப்புப் பகுதி என்று அறிவித்தார்கள். சுற்றிலும் 14 அடி உயர இரும்புக் கம்பிகளால் ஆன பெருஞ்சுவர்; 18,000 போலீசு, இராணுவத் துருப்புக்கள் காவலுக்கு.

முன்கூட்டியே டி.வி. மூலம் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தது 8 நாடுகளின் பரிவார அமைப்பு. ஆர்ப்பாட்டக்காரர்களை வன்முறையாளர்கள், அரசியலற்ற கும்பல் என்று சொல்லி தனிமைப்படுத்த விரும்பியது. ஒன்றரை லட்சம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதைப் பார்த்த ஜெனோவா குடிமக்களும் தன்னெழுச்சியாகக் கலந்தார்கள். கியிலானி என்ற ஜெனோவா இளைஞர், புதிய தலைமுறை எந்தப் பக்கம் என்பதை நிரூபிக்க தன் உயிரையே தியாகம் செய்தார்.

நகரமெங்கும் கலகங்கள். அனைத்திலும் போலீசே முதல் தூண்டுதல். போலீசு, இராணுவத்தோடு மோதல்கள் வெடித்தன. ஹெலிகாப்டரிலிருந்தும் கூட கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன; உள்நாட்டுச் செய்தி ஊடகக்காரர்களை பணம், சாம்பேய்ன் சாராயம், ஆடம்பர விருந்து மூன்றாலும் அடித்து வளைத்துக் கொண்டு — ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து அவர்களை வெகுதொலைவில் அனுப்பிவிட்டார்கள்.

அதேசமயம் ஆர்ப்பாட்டக்காரர்களின் செய்தி நிறுவனம் இருந்த பள்ளிக்கூடத்தின் மீதும், அதற்கு நேர் எதிரே ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பள்ளிக்கூடத்தின் மீதும் வரைமுறை எதுவும் இல்லாமல் காட்டுமிராண்டித் தாக்குதல் நடந்தது.

- 'நாங்கள் அமைதி வழிகள்' என்று சொன்னவர்களையும் கம்பிகளால் தாக்கியது போலீசு.

- ஒரு பெண்ணை அடித்த அடியில் அவர் கோமாவுக்குச் சென்று விட்டார்.

- பட்டினியோடு இருந்த ஒருவரை அடித்து ரணகாயமாக்கி, அவரைக் கைது செய்து சிறையிலும் போட்டு அங்கே சித்திரவதையும் செய்தது போலீசு.

- கைகளை உயர்த்தி சுவரோடு நின்றவர்களையும் தாறுமாறாக அடித்தது; அவர்களை ஆண் - பெண் - யார் என்றும் பாராமல் அவர்கள் மீது வக்கிரத்தோடு மூத்திரமும் பெய்தது.

- வின்சென்ட் என்ற பிரெஞ்சு நாட்டுப் போராட்டக்காரரின் மண்டையை உடைத்து, கைதும் செய்து, சிறை சென்றவுடன் அவரது மண்டையை மேசையில் ஓங்கி அடித்திருக்கிறது.

- கூர்மையாய்ப் பல ஆணிகள் பதிந்த கட்டையால் ஒருவரை அடித்துக் கூழாக்கி விட்டுச் சென்றது. அந்தக்கட்டை தெப்பலாய் ரத்தத்தில் மூழ்கிக் கிடந்தது; சுவரில் ரத்தம் தெறித்துக் கிடந்தது.

- நியாயமான போராட்டத்துக்காகக் கலந்து கொண்ட **கியிலானி** ஒரு போலீசு வேனைத் தாக்க முற்படுவதற்குள்ளாகவே - தலையில் ஒன்று, தாடையில் ஒன்று என்று இரு குண்டுகளால் நேருக்கு நேர் சுட்டுக் கொன்றது போலீசு - பிறகு வேனின் கீழே விழுந்த கியிலானியின் ரத்தம் தோய்ந்த சடலத்தின் மீதே ஓட்டி நசுக்கி விட்டுப் பறந்துவிட்டது.



- போராளிகளை முசோலினி படம் காட்டி 'வாழ்க முசோலினி' என்று கத்தச் சொல்லி அடித்தார்கள். கூடவே ஆபாசப் படம் காட்டி மூளையைக் கலக்கும் மனோதத்துவச் சித்திரவதையைச் செய்தார்கள்.

- கைதுக்குப் பிறகு ஆர்ப்பாட்டக்காரர்கள் மலம் கழிக்கக்கூட அனுமதி இல்லை. இருந்த இடத்திலேயே மலம் கழித்ததால் அந்த இடமே மலக்காடாகி இருந்தது.

ஜூலை 20,21 இரு நாட்களிலும் 48 மணி நேரத் தாக்குதல் நடத்திய போலீசும், இராணுவமும், மனித உரிமைப் பிரகடனங்களை அள்ளி வீசும் 8 உலக முதலாளித்துவக் கூடாரமும் ஜெனோவாக் கொடுமைகளுக்கு எப்படிப் பதில் சொல்லும்? என்ன பதில் சொல்ல முடியும்?

நகர் முழுக்க கலவரங்களைத் தூண்டி சில குண்டர்களை போலீசு நிலையத்திலிருந்தே அனுப்பி ஊரெங்கும் பொருட்களைச் சேதப்படுத்தி தீக்கொளுத்திவிட்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பழிபோட்டு அவர்கள் அரசியலற்ற வன்முறைக் கும்பல் என்று பிரச்சாரமும் செய்தது போலீசும், 8 பரிவாரமும்.

இவர்களுக்குப் பதில் சொல்வதுபோல மூன்றாம் நாள் ஒரு லட்சம் பேர் கொண்ட பேரணி அங்கே நடத்தப்பட்டது. உலக முதலாளித்துவத்துக்கு எதிரான போர் என்ற அரசியல் முழக்கம் அங்கே விண்ணதிர எழுந்தது.

ஜெனோவா தியாகிகளைக் கவுரவிக்க
ஆர்ப்பாட்டக்காரர்களே
அறிவித்ததுபோல -
ஒரு நிமிட மவுனம் வேண்டாம்!
போராட்ட மயமான முழு
வாழ்க்கையையே கொடுப்போம்!

— **வேலன்**


படிப்பகம்

www.padippakam.com

மரபினவாதம், மரபின அடிப்படையில் பாகுபாடு காட்டி ஒடுக்குவது, மரபின அடிப்படையில் வெறுப்பும் பகையும் பாராட்டுவது மற்றும் இவற்றோடு தொடர்புடைய சகிப்புத் தன்மையற்ற போக்குகள் ஆகியவற்றுக்கு எதிராக உலக அளவில் ஒரு மாநாட்டை ஐக்கிய நாடுகள் அவை இந்த ஆண்டு ஆக-31 முதல் செப்டம்பர் 4 வரை, தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடத்த உள்ளது.

இம்மாநாட்டின் மூலமாக அனைத்துலக சமூகத்தின் முன்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் சாதிய ஒடுக்குமுறைப் பிரச்சினைகளை முன் வைக்கும் முயற்சி நடந்து வருகிறது. இம்முயற்சியை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பரிவாரங்கள் மற்றும் அவற்றின் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு பார்ப்பனீய சனாதனிகள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

''சாதியப் பிரச்சினை இந்த நாட்டின் உள்விவகாரம் என்றும், இங்கேயே பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அதை விடுத்து சாதியப் பிரச்சினையை உலக அரங்கில் எழுப்புவது அரசியல் உள்நோக்கம் உடையது என்றும், அந்நிய கிருத்துவ மதவாதிகளால் தூண்டிவிடப்படுகிறது'' என்றும் பார்ப்பனிய சனாதனிகள் வாதிடுகின்றனர்.

மேலும், மரபின அடிப்படையிலான ஒடுக்குமுறைகள் பற்றி விவாதிப்பதற்காகக் கூட்டப்படும் டர்பன் மாநாட்டில் சாதியப் பிரச்சினைகளை எழுப்புவது பொருத்தமாக இருக்காது என்று தர்க்க வாதமும் புரிகின்றனர். அதுமட்டுமல்ல, டர்பன் மாநாடே கருப்பின மக்கள் மீதான வெள்ளை நிறவெறி இனவாதம் பற்றியது தான் என்று குறுகிய பார்வையை உருவாக்கவும் எத்தனிக்கின்றனர்.

பிறப்பாலும் தொழிலாலும் பாகுபடுத்தி ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டாமைக் கொடுமையால் பல வகையிலும் வாழ்வுரிமை மறுக்கப்படும் மக்கள், மரபு மற்றும் மத அடிப்படையில் பொது மதவழிபாடு, பொதுக் குடிநீர் நிலைகள், பொதுப் பாதை முதல் சுடுகாடு - இடுகாடு வரை பொது இடங்களைப் பயன்படுத்துவதிலிருந்து, வன்முறையாகத் தடுக்கப்படும் மக்கள், நாள்தோறும்



தென்னாப்பிரிக்க ஓவியம்
நன்றி: தலித் முரசு

உயர்சாதியினரின் படுகொலைகளுக்கும், பாலியல் வன்முறைக்கும் பலியாகும் மக்கள் மீதான ஒடுக்குமுறை குறித்து உலக அரங்கில் விவாதிக்கப்படுவதும், தீர்வு காண முயல்வதும் அம்மக்களின் அடிப்படை உரிமை.

பூர்வீக மரபின நிறவெறி உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் கருப்பினத்துக்கு எதிரான வெள்ளை நிறவெறி. பாலஸ்தீன மக்களுக்கு எதிரான யூத ''ஜியோனிச'' இனவெறி இன்னொரு வடிவம். வட அமெரிக்காவில் குடியேறி ஐரோப்பிய வெள்ளை நிறவெறியினர் செவ்விந்திய இனமக்களை ஒடுக்கி, அவர்களது பண்பாட்டை அழித்து, இயற்கை வளங்களைச் சூறையாடி, அவர்களின் சொந்த மண்ணையே அபகரித்துக் கொண்டது இன்னொன்று.

அதேபோல, ஆஸ்திரேலியா - நியூசிலாந்து போன்ற நாடுகளில் ஆங்கிலேயர் குடியேறி அங்கிருந்த பூர்வகுடி இனமக்களை அழித்து, எஞ்சியவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதும் மற்றொன்று. அபினி வியாபாரம் செய்து சீனர்களிடையே போதைப் பழக்கத்தைப் புகுத்தி, அந்நாட்டின் கடற்கரை நகரங்களைப் பிடித்து வைத்துக் கொண்டு, ''சீனர்களும் நாய்களும் இங்கே நுழையக் கூடாது'' என்று ஒதுக்கி வைத்த ஐரோப்பிய இன - நிறவெறி பிரிதொன்று. இதைப்போலத்தான் இந்தியர்களையும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் நடத்தினர். இந்த நாட்டில் இன்னமும் அந்த இனப்பாகுபாடு - ஒடுக்குமுறை மேட்டுக்குடியினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிளப்புகளில் உள்ளன.

இத்தகைய மரபினவாதம், மரபினப்பாகுபாடு - ஒடுக்குமுறை, நிறவெறி கொடூரமாக வெளிப்பட்ட இரண்டு நிகழ்வுகள்: யூத இனத்தவர்களுக்கு எதிரான இட்லரின் நாஜி ஆரிய இனவெறி; மற்றொன்று கருப்பின மக்களுக்கு எதிரான வெள்ளை இன - நிறவெறி. இந்த வெள்ளை இன - நிறவெறி புதிய நாஜி இயக்கமாக ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளில் புது வீரியம் பெற்றுள்ளது.

இந்த வகையிலான மரபினவாதம், மரபினப் பாகுபாடு ஒடுக்குமுறைகளும் கூட கடந்த சில நூற்றாண்டுகளாக நிலவி வருவன; இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இது பெருமளவு அம்பலப்பட்டு, உலக மக்களின் கவனத்தை ஈர்த்து, ஐக்கிய நாடுகள் அவையின் 1948-ஆம் ஆண்டு மனித உரிமைகள் பிரகடனத்தில் இடம் பெற்றது. மரபினம், நிறம், பால் மற்றும் மத அடிப்படையிலான எல்லாப் பாகுபாடு - ஒடுக்குமுறைகளையும் ஒழிப்பதை அந்த மனித உரிமைகள் பிரகடனம் இலட்சியமாக அறிவித்தது. சாதியமும் பிறப்பு, தொழில் மற்றும் மத ரீதியிலான ஒரு தனிச்சிறப்பான மரபின நோக்கில் பாகுபடுத்திய ஒடுக்குமுறைதான் இந்தியச் சமூகத்தின் ஐந்திலொரு பிரிவினரை ஒடுக்கியும், ஒதுக்கி வைத்தும், தீண்டாமை பாராட்டியும் அடிப்படை மனித உரிமைகளை மறுப்பது ஆகியவை அடங்கிய சாதியம், 3000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஆரிய மரபின நோக்கில் பாகுபடுத்தும் நிறவெறி ஆக்கிரமிப்பு காரணமாக உருவானதுதான். என்றாலும் இந்திய ஆட்சியாளர்களான பார்ப்பன - பனியா பிரதிநிதிகள் அப்போதிருந்தே ஐக்கிய நாடுகள் அவை உட்பட உலக அரங்கில் எங்குமே சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான குரல் ஒலிப்பதைத் தடுத்துவிட்டனர்.

1969-இல் இந்திய அரசு கையொப்பமிட்டு அங்கீகரித்ததுதான் ''மரபினப் பாகுபாடு - ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழித்துக்கட்டுவதற்கான ஐக்கிய நாடுகள் அவையின் கமிட்டி'' (ECERD) இக்கமிட்டி 1996-இல் தான் முதன்முறையாக, சாதி அடிப்படையிலான பாகு

### டர்பன் நிறவெறி எதிர்ப்பு மாநாடு:

# பார்ப்பனியத்தின் சாதியம் உலகளவில் அம்பலப்படுத்த வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

பாடு - ஒடுக்குமுறை, தீண்டாமை மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளின் பிரச்சினையை அங்கீகரித்தது. அக்கமிட்டியின் 1996 செப். 17-ஆம் தேதி நிறைவுக் கூட்டம், ''தாழ்த்தப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர் பிரச்சினை மரபினப் பாகுபாடு - ஒடுக்குமுறையின் அனைத்து வடிவங்களை ஒழிப்பது என்ற வரையறையின் கீழ் வருகிறது'' என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறது.

**இழிவான கொடிய சாதிய முறை உலக அரங்கில் விவாதிக்கப்படும்பொழுது, மேலை நாடுகளில் பீற்றிக் கொள்ளப்படும் காந்தீய அகிம்சை - சகிப்புத் தன்மையும், இந்துத்துவ ஆன்மீக மகத்துவமும் நார்நாராகக் கிழிந்து அம்பலப்படும்; சங்கராச்சாரி, மகரிஷி மகேஷ் யோகி; விஸ்வ இந்து பரிசத் போன்றவர்கள் இந்துமத ஆன்மீகத்தின் பெயரால் மேலை நாடுகளில் நடத்தும் வசூல் வேட்டை பாதிக்கப்படும் என்று பார்ப்பன சனாதனிகள் அஞ்சுகின்றனர்.**

மரபினவாதம் மற்றும் மரபினப் பாகுபாடு - ஒடுக்குமுறை மீதான ஐ.நா. அவையின் சிறப்பு நெறியாளர் 1996-97 ஆம் ஆண்டில் இந்தியாவில் பயணம் செய்து, ''இந்திய அரசு மற்றும் தொடர்புடைய சமூகத்தின் ஒத்துழைப்போடு இங்குள்ள தீண்டத்தகாதவர்களின் நிலைமை பற்றி மதிப்பீடு செய்வதற்கு'' அனுமதி கோரினர். ஆனால் இந்திய அரசு அம்மாதிரியானதொரு பயணத்திற்கு இன்று வரை அனுமதியளித்திடவில்லை.

ஐக்கிய நாடுகள் அவையின் மகளிர் மீதான பாகுபாடு - ஒடுக்குமுறை ஒழிப்புக் கமிட்டியின் 2000 ஆண்டு இறுதி அறிக்கை, ''சாதிய முறை போன்ற சமூக நடைமுறைகள் ஐ.நா. அவைத் தீர்மானங்களை அமலாக்குவதற்குப் பெருந்தடையாக உள்ளன'' என்று குறிப்பிடுகிறது. ஜெனிவா, ஐ.நா. அவையின் 5-வது துணை ஆணையம் ஆகஸ்டு 2000-த்தில் ''பிறப்பு அடிப்படையிலான பாகுபாடு'' குறித்த ஒரு வேலை அறிக்கை தயாரிக்கும்படி ஆணைய உறுப்பினர் இராஜேந்திர கே. குணசேகரேவைப் பணித்திருக்கிறது.

1. பிறப்பு மற்றும் தொழில் அடிப்படையில் பாகுபடுத்தி ஒடுக்கப்படும் சமூகங்களை இனங்காண்பது. 2. அம்மாதிரியான ஒடுக்குமுறைகளை ஒழித்துக்கட்டுவதற்காக தற்போதுள்ள அரசியல் சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பரிசீலிப்பது. 3. அம்மாதிரியான பாகுபாடு ஒடுக்குமுறையை ஒழிப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளைப் பரிந்துரைப்பது ஆகியவை குணசேகரே அறிக்கையின் நோக்கமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறப்பு மற்றும் தொழில் ரீதியில் பாகுபடுத்தி ஒடுக்குவது என்பது வேறு எந்த வகை இன ஒடுக்குமுறையிலும் பார்க்க சாதிய முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும். இருந்தபோதும், இந்திய அரசு இத்தகைய முயற்சிகள் அனைத்தையும் தடுத்தே வந்திருக்கிறது.

இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைக்குப் போராடும் பல்வேறு குழுக்கள் இணைந்து ''தலித் மனித உரிமைகளுக்கான தேசிய இயக்கம்'' என்கிற அமைப்பை நிறுவியுள்ளன. இந்த இயக்கம் தயாரித்துள்ள ஆய்வறிக்கை ஆதாரங்கள் அடங்கிய ஆவணம் ஆகியவற்றை முன்வைத்து சாதிய ஒடுக்குமுறைப் பிரச்சனையை டர்பன் மாநாட்டில் எழுப்புவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

டர்பன் மாநாட்டுக்கான தயாரிப்புக் கூட்டம் ஈரான் தலைநகரில் டெகரானில் கடந்த பிப்ரவரி மாதம் நடந்தது. அதில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இந்திய அரசின் அட்டர்னி ஜெனரல் சோலி செராப்ஜி என்ற பார்ப்பன - பனியா ஆளும் வர்க்கங்களின் பார்சி வழக்கறிஞர், சாதியப் பிரச்சினை மரபினவாத அடிப்படையிலானது அல்ல; சாதியப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினைதான் என்று வாதாடி இருக்கிறார். டர்பன் மாநாட்டில் இப்பிரச்சினை எழுப்பப்படுவதைத் தடுக்கும் உள்நோக்கத்தோடு உச்சநீதி மன்ற முன்னாள் தலைமைப் பார்ப்பன நீதிபதி ரங்கநாத மிஸ்ரா தலைமையில் ஒரு கமிசனை மத்திய அரசு நியமித்துள்ளது. முன்பு இந்திய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்து நாட்டின் பல மனித உரிமை மீறல் கொடுமைகளை மூடி மறைப்பதில் அரசுக்கு ஊழியம் செய்தவர்தான் இந்த ரங்கநாத மிஸ்ரா.

பார்ப்பனிய சனாதன இந்து மதமே ''வர்ணாசிரம தர்ம'' அடிப்படையிலானது. இதன் நேரடியான பொருளே மரபின - நிற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தனி சமூகப் பிரிவு எனக்கருதி ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குமுறையும் என்பதுதான். வர்ணாசிரம தர்மப்படியிலான நான்கு வர்ணங்களுக்கு வெளியில் வைக்கப்பட்ட ''பஞ்சமர்கள்'' என்ற பிரிவைச் சேர்ந்த மக்கள்தாம் தீண்டத்தகாத சாதிகளாக்கப்பட்டனர். பிறப்பின் மூலமும் அகமண முறையின் மூலமும் சுத்தமானவர்கள் - அசுத்தமானவர்கள், மேன்மக்கள் - மிலேச்சர்கள் என்று பாகுபடுத்தி, மலம் அள்ளுவது, பிணம் சுமப்பது உட்பட இழிவானதாகக் கருதப்படும் தொழில்களில் ஈடுபடுத்தி, ''தொட்டால் தீட்டு, கண்பட்டால் பாவம்'' என்று ஒதுக்கி வைத்து ஒடுக்கப்பட்டனர். இந்தக் கொடுமைகள் எல்லாம் இன்னமும் நீடித்திருப்பதோடு, ஆதிக்க சாதியினர் புதுவேகத்தோடும் வெறியோடும் இவற்றைப் பாதுகாத்து வருகின்றனர்.

இத்தகைய இழிவான கொடிய சாதிய முறை உலக அரங்கில் விவாதிக்கப்படும் பொழுது, மேலைநாடுகளில் பீற்றிக் கொள்ளப்படும் காந்தீய அகிம்சை - சகிப்புத் தன்மையும், இந்துத்துவ ஆன்மீக மகத்துவமும் நார்நாராகக் கிழிந்து அம்பலப்படும்; சங்கராச்சாரி, மகரிஷி மகேஷ் யோகி; விஸ்வ இந்து பரிசத் போன்றவர்கள் இந்துமத ஆன்மீகத்தின் பெயரால் மேலைநாடுகளில் நடத்தும் வசூல் வேட்டை பாதிக்கப்படும் என்று பார்ப்பன சனாதனிகள் அஞ்சுகின்றனர்.

ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய ஒடுக்குமுறையில் இருந்து விடுபட நடத்தும் போராட்டத்திற்கு இன்னுமொரு துணையாக நிற்கும் என்பதால், உலக அரங்கில் சாதியமுறை மற்றொரு மரபினவாத ஒடுக்குமுறை என்கிற முறையில் இவ்விவாதம் உரத்த குரலில் ஒலிக்கப்பட வேண்டும்.

• மா.வா.

## அறிவிப்பு

**சென்ற இதழில் 'நக்சல்பரி எழுச்சி நாள் உரை' என்ற ஒலிப்பேழையை அறிமுகப் படுத்தியிருந்தோம். கேட்பதற்குகந்த ஒலியும் - தெளிவும் இப்பேழையில் இல்லை என்பதால் இதன் விற்பனையை நிறுத்தியிருக்கிறோம். இதே உரையை நிலைய ஒலிப்பதிவு செய்து விரைவில் வெளியிடுவோம்.**

**- ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

தொடர் கட்டுரை: 16



## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்:

# செய்தி ஊடகம் இந்து மதத்தை இழிவுபடுத்துகிறதா?

*"இன்று இந்து கலாச்சாரம், பண்பாடு, நம்பிக்கை, பாரம்பரியம், புனித நூல்களைத் தொலைக்காட்சிகளிலும், திரைப்படங்களிலும் கிண்டல் பண்ணுகிறார்கள். கிறிஸ்துவ பாதிரிகள், முசுலீம் மௌல்விகள் என்றால் பெரிய மகாத்மா போலவும், கோயில் பூசாரிகள் - இந்துத் துறவிகள் கயவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். எனவே வானொலி, பத்திரிகைகள், தொலைக்காட்சி போன்றவற்றில் இந்துக்களை இழிவுபடுத்தும் எந்தக் கருத்தும் வராமல் தடை செய்ய வேண்டும்! அதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்த வேண்டும்."*

**("இந்துக்களுக்கு உரிமை கிடையாதா?" - இந்து முன்னணி வெளியீடு)**

•○•

இந்து தர்மம், பண்பாட்டை யாரும் வெளியிலிருந்து மெனக்கெட்டு கிண்டல் பண்ணத் தேவையில்லை. வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், ஸ்ருதிகள், ஸ்தோத்திரங்கள் இவற்றையெல்லாம் இந்து முன்னனணியே மலிவு விலையில் அச்சடித்து வெளியிடலாமே? கடவுளர்கள் உருவான கதை, ஊடல் - கூடல் - ஆபாசங்கள், தேவலோக அழகிகளான ரம்பா - ஊர்வசி - மேனகாக்களிடம் கடவுள்களும், முனிவர்களும் மயங்கிய கதைகள், அய்யப்பன் - விநாயகர் பிறந்த கதைகள் இன்ன பிறவற்றையெல்லாம் மக்கள் தெரிந்து கொண்டு 'ப்பூ இந்து தர்மம் இதுதானா' என்று ஒதுக்கி விடுவார்கள். அப்படித் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே இந்து மதவெறியர்களும் - உபந்நியாசம் செய்பவர்களும் இந்து தர்மம் - பண்பாடு பற்றி பூடகமாகவும் தமிழ்ச் சிறு பத்திரிகைகளின் புதுக் கவிதை பாணியில் புரியாமலும் பேசி வருகிறார்கள்.

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றி வந்து முணுமுணென்று, சொல்லும் மந்திரம் ஏதடா, நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையில்" என்று சித்தர்கள் அன்று கேட்டார்கள். புத்தர், மகாவீரர், சாருவாகன், நியாயவாதிகள், மீமாம்சவாதிகள், பூதவாதிகள் பார்ப்பனியத்தை எதிர்த்துக் கிளம்பிய அனைவரும் 'இந்து தர்மத்தை' புரியும்படி மக்களிடம் விளக்கியதற்காகவே ஒடுக்கப்பட்டார்கள். அவர்களுடைய இலக்கியங்களும் பெருமளவு அழிக்கப்பட்டன.

தற்காலத்தில் அம்பேத்கரும், பெரியாரும் இதைச் செய்ததற்காகவே இந்துமத வெறியர்களால் கேவலமாக எதிர்க்கப்படுகிறார்கள். "எல்லாம் இறைவன் செயல் என்றால் கொலை கொள்ளை எவன் செயல்?" என்ற திராவிடர் கழக பிரச்சாரத்திற்கு, 'எல்லாம் மனிதச் செயல் என்றால் ஈ.வெ.ராவிற்கும் மணியம்மைக்கும் குழந்தையில்லையே ஏன்?' என்று இந்து முன்னணி தனது வெளியீடு ஒன்றில் பதிலளித்திருக்கிறது. இது போக 'பெரியாரைக் கொளுத்துவோம்' என இராம. கோபாலன் பகிரங்கமாக அறிவிக்க முடிகிறது என்றால் அதன்பின்னே வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் டன் கணக்கில் உள்ளது. ஆகவே 'இந்து தர்மத்தை' அம்பலப்படுத்தும் அதாவது 'இழிவுபடுத்தும்' அனைவரும் இன்று வரை ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே வரலாறு காட்டும் உண்மை. 'இந்து தர்மத்தை' விமரிசிப்பதற்கெதிரான தடை ஏற்கனவே அமலில் இருக்கிறது. ஏதோ புதிதாக விதிக்க வேண்டும் என இந்துமுன்னணி கோருவதன் பொருள் தண்டனையை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான்.

**இந்து மதவெறியர் எதிர்த்த 'திப்புவின் வாள்' என்ற தொலைக்காட்சித் தொடர்.**



அடுத்து வானொலி - வானொளியில் இந்து மதம் இழிவுபடுத்தப்படுகிறது என்பது உண்மையா? நிச்சயம் கிடையாது. இந்நாட்டு உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் பார்ப்பனியத்தின் புராணப் புரட்டுக்கள்தான் தொடர்ந்து ஒலி-ஒளியில் பரப்பப்படுகிறது. இராமானந்த சாகரின் இராமாயணம், சோப்ராவின் மகாபாரதம், சாணக்கியன், ஸ்ரீ கிருஷ்ணா, ஜெய் அனுமான், சிவமகா புராணம் முதலான ஏராளமான புராணக் கதைகள் தூர்தர்சனிலும், தனியார் அலைவரிசைகளிலும், இந்தி மற்றும் தேசிய மொழிகளில் மாற்றம் செய்யப்பட்டும் தொடர்ந்து ஒளிபரப்பப்படுகின்றன. தீபாவளி, ஓணம், ஹோலி, ரக்சாபந்தன், விநாயகர் சதுர்த்தி, ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, சரஸ்வதி பூஜை, வருடப்பிறப்பு போன்ற இந்துப் பண்டிகை நாட்களில் சங்கராச்சாரி அருளுரையுடன் துவங்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏனைய மதப்பண்டிகைகளுக்குக் கிடையாது.

மேலும் விநாயகர் ஊர்வலம் பம்பாயிலிருந்தும், கிருஷ்ண ஜெயந்தி மதுராவிலிருந்தும், தியாகய்யர் உற்சவம் திருவையாற்றிலிருந்தும், அமர்நாத் யாத்திரை ஜம்முவிலிருந்தும், ஜெகன்னாதரின் தேரோட்டம் பூரியிலிருந்தும், தசரா ஊர்வலம் மைசூரிலிருந்தும், காளி பூஜை கல்கத்தாவிலிருந்தும், சூர சம்ஹாரம் திருச்செந்தூரிலிருந்தும், ஓணம் ஊர்வலம் திருவனந்தபுரத்திலிருந்தும், மகர விளக்கு ஐயப்பன் கோவிலிலிருந்தும் நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. குடமுழுக்கு, தேரோட்டம் போன்ற உள்ளூர் நிகழ்ச்சிகள் வானொலி மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. இவைகளுக்காக பல கோடி ரூபாய் மதிப்புள்ள முக்கிய ஒளிபரப்பு நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன. இத்தகைய சலுகை ஏனைய மதங்களுக்குக் கிடையாது. மேலும் ராமனைக் கசிந்துருகும் கர்நாடக சங்கீதக் கீர்த்தனைகளானாலும் சரி, மாணவர்களின் தமிழ்ப்பாட நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இடம் பெறும் திருவாசகமானாலும் சரி பார்ப்பனியத்திற்குத் தரப்படும் முக்கியத்துவத்தில் நூற்றிலொரு பங்கு கூட முசுலீம் - கிறித்தவ மதங்களுக்குக் கிடையாது.

காலனிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி உயிர் துறந்த இந்திய அரசர்களில் முதன்மையானவன் திப்பு. அவன் பிறப்



படிப்பகம்

www.padippakam.com

பினால் ஒரு முசுலீம் என்பதற்காக ஆர்.எஸ்.எஸ். கும்பல் திப்புவைக் கட்டோடு வெறுக்கிறது. 'திப்பு சுல்தான்' தொடரை ஒளிபரப்பியதற்காக பல தூர்தர்சன் நிலையங்கள் இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டன. அதன் பிறகு தொடருக்கு முன்னால் ''இது உண்மைக் கதையல்ல, கற்பனைச் சம்பவங்கள் நிறைந்தவை'' என்ற அறிவிப்போடு பல சமசரங்களுடன்தான் திப்புவின் தொடர் ஒளிபரப்பானது. ''திப்புவின் வரலாறு பொய், இராமாயணம் உண்மை'' என்று வரலாற்றையே இந்து மதவெறியர்களால் புரட்டிப் போட முடிகிறது என்றால் இந்த முட்டாள் தனத்தை தாலிபான்களின் ஆட்சியில் கூடக் காண முடியாது.



ரூப் கன்வர் உடன்கட்டை ஏற்றிக் கொல்லப்பட்டதை பதிவு செய்த குறும்படம் இந்து மதவெறியரால் தடை செய்யப்பட்டது.

47 பிரிவினையின் போது நடந்த இந்து - முசுலீம் கலவரப் பின்னணியை வைத்துத் தயாரிக்கப்பட்ட 'தமஸ்' தொடரையும் இந்து மதவெறியர்கள் எதிர்த்தனர். பார்ப்பன இந்து மதம் விதவைகளை எப்படிக் கேடாக நடத்துகிறது என்பதைக் கருவாகக் கொண்ட தீபா மேத்தாவின் 'வாட்டர்' படப்பிடிப்பையே ஆர்.எஸ்.எஸ். கும்பல் தடை செய்திருக்கிறது. சரஸ்வதியை உள்ளபடி நிர்வாணமாய் வரைந்தார் என்பதற்காக ஓவியர் எம்.எப். உசைனைத் தாக்கியதும் இவர்கள்தான்.

இந்தியாவின் திரையுலகமும் கூட பார்ப்பனியத்தின் பண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக்கொண்ட ஊதுகுழலாகத்தான் இருக்கின்றது. இந்தித் திரையுலகைக் கட்டுப்படுத்துவது பால்தாக்கரேவின் சிவ சேனா கும்பல்தான். ரோஜாப் படத்தில் காசுமீர் முசுலீம் மக்களைக் கேவலப்படுத்திய மணிரத்தினம், 'பம்பாய்' படத்திலும் முசுலீம்களைக் கலவரக்காரர்களாக உண்மைக்குப் புறம்பாகச் சித்திரித்ததனாலேயே தாக்கரேயின் பாராட்டையும், அனுமதியையும் பெற்றார். மணிரத்தினத்தின் இத்தகைய படங்கள் தூர்தர்சனின் ஏதோ ஒரு அலைவரிசையால் மாதந்தோறும் இப்போதும் திரையிடப்படுகிறது. பாகிஸ்தான் எதிர்ப்பை வைத்து முசுலீம்களை பயங்கரவாதிகளாக - வில்லன்களாகக் காட்டும் படங்கள் தற்போது ஏராளம் வருகின்றன. முசுலீம்களையும், கம்யூனிஸ்டுகளையும் கேவலப்படுத்தி ஹாலிவுட்டில் 80-களில் வந்த படங்களின் போக்கிற்கு இணையானது இது.

விஜயகாந்த், அர்ஜூன் போன்றோரது 'தேசபக்தி'ப் படங்களிலும், தெலுங்கின் மசாலாப் படங்களிலும், அவ்வளவு ஏன் கடவுளைக் கேலி செய்து ஓராண்டுக்கு முன் வந்த வேலுபிரபாகரனின் 'புரட்சிக்காரன்' படத்திலும் 'பின்லேடன்'தான் வில்லன். தாடியும், குர்தாவும், கண்களில் தெறிக்கும் வெறியும் கொண்ட முசுலீம் பயங்கரவாதிகளாய் இவர்கள் காட்டப்படுகிறார்கள்.

மேலும் முசுலீம் கிறித்தவப் பெயர் கொண்டவர்களே கடத்தல்காரர்களாவும், சட்ட விரோத தொழில் செய்பவர்களாகவும் திரைப்படத்தில் தோன்றுவது இந்தியத் திரை மரபாகவே நிலைபெற்று விட்டது. பார்ப்பனியத்தின் பண்பாட்டை ஆதரிப்பவரே நல்ல முசுலீம் - கிறித்தவராகத் திரைப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றனர்.

திராவிட இயக்கத்தின் தூண்டுதலில் வந்த எம்.ஆர். இராதாவின் (பார்ப்பனி-

**நம் நாட்டின் காட்சி - செய்தி - பொழுதுபோக்கு ஊடகங்கள் அனைத்தும் பார்ப்பனமயமாக்கப் பட்டு இந்து மதவெறியின் பக்கவாத்தியங்களாகச் செயல் படுவனதாம். இருப்பினும் பார்ப்பனியத்தின் சென்சார் கண்களில் சிக்காமல் எங்கோ எழும் ஒன்றிரண்டு கலகக்குரல் களையும் நெரிக்க வேண்டும் என்பதுதான் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் விருப்பம்.**

யத்தின் சமூக விரோதத்
தன்மையை எதிர்த்து வந்த)
படங்களும், நாடகங்களும்,
கல்லடியும், சொல்லடியும்
எதிர்கொண்டே மக்களிடம்
சென்றன. இவரைத் தவிர்த்த
ஏனைய கலைஞர்கள்
அண்ணாவின் 'ஒன்றே
குலம் ஒருவனே தேவன்'
என்ற சமரசத்திற்கிணங்க
பார்ப்பனியத்தை ஏற்றுக்
கொண்டவர்களாகி
விட்டனர். தி.மு.க.வின்
கொ.ப.செ. டி. ராஜேந்தர்
தீவிரமான ஆஞ்சநேய
பக்தர். பக்திப் படங்களை
மாதம் ஒன்று என எடுத்துத்
தள்ளும் இராம. நாரா
யணன் தி.மு.க.வின்
எம்.எல்.ஏ.வாக இருந்தவர்.

தன் மகனுக்கு 'பிரா‌பகரன்' என்று பெய
ரிட்டு மகிழ்ந்தவரும், தனது 'கேப்டன் பிர
பாகரன்' படத்தை விடுதலைப் புலிகளின்
தலைவர் பாராட்டியதைப் பெருமைப்
பட்டுக் கொண்டவருமான நடிகர் விஜ
யகாந்த் ஒரு மாதிரி தேசியம் கலந்த தமிழ்ப்
பற்றாளனாகக் காட்டிக் கொண்டவர் இவர்.
'கள்ளழகர்' தொடங்கி தற்போது ஓடிக்
கொண்டிருக்கும் 'நரசிம்மா' வரை இராம
கோபாலனுக்குப் போட்டியாக பேச ஆரம்
பித்திருக்கிறார் விஜயகாந்த். நரசிம்மா
படத்தில் 'இந்தியாவில் ஒரு முசுலீம், ஜனா
திபதியாக, கிரிக்கெட் காப்டனாக மாற
முடியும், உங்க பாகிஸ்தானில் ஒரு இந்து
வரமுடியுமா? இங்கே ஏராளம் மசூதிகள்
கட்ட முடியும், உங்க பாகிஸ்தானில்
இந்துக் கோவில்கள் கட்ட முடியுமா?'
என்று ஒரு காசுமீர் முசுலீம் 'தீவிரவாதி
யிடம்' விஜயகாந்த் வாதிடுகிறார்.

எனவே, தமிழ்த் திரையுலகின் மணிரத்
தினம், விசு, பாலசந்தர், ஜீ.வி., சங்கர், கம
லஹாசன், பாலகுமாரன், சுஜாதா, வாலி
போன்ற பார்ப்பனர்களானாலும், விஜ
யகாந்த், பாரதிராஜா, எஸ். தாணு, இளைய
ராஜா, வைரமுத்து போன்ற சூத்திர - பஞ்ச
மர்களானாலும் சரி ஆர்.எஸ்.எஸ்.-ன்
இந்து தேசபக்த - பண்பாட்டு விழுமியங்
களை ஏற்றுக் கொண்டவர்கள்தான். பிரபல
பின்னணிப் பாடகியான சித்ரா, சென்னை
ஆர்.எஸ்.எஸ். குரு பூஜையில் வருடந்
தோறும் பாட்டுப் பாடுகிறார்.

கௌதமி, எஸ்.வி. சேகர், விசு, விஜய
சாந்தி, சத்ருகன் சின்ஹா, விக்டர் பானர்ஜி
என இந்திய அளவில் திரை நட்சத்திரங்கள்
பா.ஜ.க.வில் குவிந்து கிடக்கின்றனர். இரா
மாயணத் தொடரில் இராமன், சீதையாக
நடித்த நடிகர்கள் கூட பா.ஜ.க.வின் பாராளு
மன்ற உறுப்பினர்களாக நிறுத்தப்பட்டிருக்



படிப்பகம்

www.padippakam.com

கின்றனர்.

அரசியல் மற்றும் மக்களின் போராட்டங்களைப் பதிவு செய்யும் 'டாக்குமென்டரி' பட உலகிலும் இந்து மதவெறியர்களை எதிர்த்து ஏதும் செய்ய இயலாது. அத்வானியின் ரத யாத்திரையை வைத்து இந்து மதவெறியர்கள் நடத்திய 'ராம ஜென்ம பூமி'க் கலவரங்களைப் பதிவு செய்து 'கடவுளின் பெயரால்' என்ற குறும்படத்தின் மூலம் அம்பலப்படுத்தியவர் ஆனந்த் பட்வர்த்தன். அந்தப் படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பக்கூடாது என்ற அரசு உத்தரவை முறியடிக்க அவர் 3 ஆண்டுகள் நீதிமன்றத்தில் போராட வேண்டியிருந்தது. அதேபோல ரூப் கன்வர் என்ற இளம் பெண்ணை உடன்கட்டையேற்றிக் கொன்ற பார்ப்பனியத்தின் பயங்கரவாதத்தைப் பதிவு செய்து ஒரு குறும்படமாக்கிய 5 பெண் பத்திரிகையாளர்களுக்கும் அதே நிலைமைதான். போலீசு நடத்திய வெறியாட்டத்திற்குப் பிறகு, கொடியங்குளத்தின் அவலத்தை வீடியோவில் பதிவு செய்து தாழ்த்தப்பட்ட மக்களிடம் திரையிட்டது 'புதிய தமிழகம்' கட்சி. அதைக் கூட தடை செய்ய வேண்டும் என்று கூக்குரலிட்டவர் இந்து முன்னணி இராம. கோபாலன்.

இப்படி காட்சி ஊடகத்தில் மட்டுமல்ல, செய்தி ஊடகத்திலும் பார்ப்பனியமே தலைதூக்கி துரத்துகிறது. இந்தியாவின் அநேக மாத, வார, நாளிதழ்கள் பார்ப்பன மேல்சாதியினரிடமே இருப்பதால் இந்து கட்டுவாதத்திற்கும், பிற்போக்குத்தனங்களின் கோட்டையாகவும் அவை விளங்குகின்றன. ஜாதகம், ஜோசியம், நல்ல நேரம், வார - மாத ராசி பலன்கள், சாமியார்களின் அருளுரைகள், கோவில் யாத்திரைகள் எல்லாம் இந்தப் பத்திரிகைகளில் நிரம்பி வழியும். எல்லா மதத்தினரும் வாங்கிப் படிக்கும் குமுதம், விகடன் வகையறாக்கள் தீபாவளிக்கு மூன்று புத்தகங்கள் வெளியிடும். ரம்ஜான், கிறிஸ்துமஸ் பண்டிகைகளுக்காக மூன்று பக்கங்களைக் கூட அதிகக்காது.

உள்நாட்டு - வெளிநாட்டு சினிமா கிசுகிசுக்கள் நிரம்பி வழியும் தினமலரின் வாரமலர் பக்கங்களில் கீழே ராமகிருஷ்ண பரமஹம்சரது பொன்மொழிகள் தவறாமல் இடம் பெறும். 'பொய்யே உன் பெயர்தான் தினமலரா' என்பதற்கேற்ப தமிழகம் முழுதும் ஜெலட்டின் குச்சிகளும், ஐ.எஸ்.ஐ. உளவாளிகளும் நிரம்பி வழிவதாக எப்போதும் கூசாமல் எழுதுகிறது தினமலர். பா.ஜ.க.வின் அரசியலை ஆதரிப்பதற்கு தனது தலையங்கப் பக்கத்தையே ஒதுக்கியுள்ளது தினமணி. தினமலர், தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், தி ஹிந்து, இந்தியா டுடே போன்ற பத்திரிகைகளில் பணியாற்றுபவர்களில் பலர் ஆர்.எஸ்.எஸ். கும்பலைச் சேர்ந்தவர்கள்தான்.

இந்துமதவெறியர்களுக்கு நேரடிப் புரவலராக இருக்கும் தினமலர் பார்ப்பனியத்தின் இலக்கியப் பத்திரிகையான காலச்சுவட்டிற்கும் புரவலராக இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். தனது அலுவலகத்திலேயே பெருமையுடன் விற்பனை செய்யும் ஜெயமோகனின் 'விஷ்ணு புரம்' நாவலுக்கு பண உதவி செய்தவர் பொள்ளாச்சி மகாலிங்கம். கோக் - பெப்சி முகவராக இருக்கும் மகாலிங்கத்தின் கல்லூரிகளில்தான் ஆர்.எஸ்.எஸ்.இன் பயிற்சி முகாம்கள் இன்னும் நடக்கின்றன. எங்கே பிராமணன், மகாபாரதம், இராமாயணத்தை வைத்தே 'அரசியல்' பத்திரிகை நடத்தும் 'சோ' தனது பா.ஜ.க. விசுவாசத்திற்குப் பரிசாக ராஜ்ய சபா உறுப்பினர் பதவியைப் பெற்றார். இவரைப் போலவே இந்து மதவெறியரின் பத்திரிகையாளராக இருந்த அருண் சோரி - இன்று அமைச்சர் பதவியையே பரிசாகப் பெற்றிருக்கிறார்.

டைம்ஸ் ஆப் இந்தியா, எக்ஸ்பிரஸ் போன்ற ஆங்கில - இந்தி நாளேடுகள் பல பாபர் மசூதி இடிப்பிலும், மண்டல் கமிசன் பிரச்சினையிலும், பா.ஜ.க.வின் ஊது குழலாய்ச் செயல்பட்டன. முலாயம்சிங் முதலமைச்சராக இருந்த போது 90-ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற அயோத்தி கரசேவை கலவரத்தில் நூற்றுக்கணக்கான இந்துக்கள் கொல்லப்பட்டதாகப் பொய்ச் செய்தி வெளியிட்ட ஆஜ், தைனிக்ஜாக்ரண், சுதந்திர சேத்னா, சுதந்திர பாரத் எனும் 4 இந்தி இதழ்கள் 'இந்திய பிரஸ் கவுன்சிலினால்' கடும் கண்டனம் செய்யப்பட்டன. இக்கண்டனத்தைக் கூட ஏனைய தேசியப் பத்திரிக்கைகள் இருட்டடிப்பு செய்து விட்டன.

சட்ட ரீதியில் மதச் சார்பின்மை என்று சொல்லிக் கொண்டாலும் செய்தி ஊடக நிறுவனங்களில் இயல்பாக உள்ள 'இந்து' ஆதிக்கம் சிறுபான்மை மக்களைத் தனிமைப்படுத்துகிறது. போட்டி மதவாதம் எழுவதற்கு இத்தகைய இந்து செய்தி நிறுவனங்களும் ஒரு காரணமாகின்றது.

ஆகையினால் நம்நாட்டின் காட்சி - செய்தி - பொழுதுபோக்கு ஊடகங்கள் அனைத்தும் பார்ப்பனமயமாக்கப்பட்டு இந்து மதவெறியின் பக்கவாத்தியங்களாகச் செயல்படுவனதாம். இருப்பினும் பார்ப்பனியத்தின் சென்சார் கண்களில் சிக்காமல் எங்கோ எழும் ஒன்றிரண்டு கலகக்குரல்களையும் நெரிக்க வேண்டும் என்பதுதான் இந்து மதவெறி பாசிஸ்டுகளின் விருப்பம். இட்லரின் இந்திய வாரிசுகள் வேறு எப்படி இருப்பார்கள்?

**— அடுத்த இதழில் நிறைவுறும்**

## நூல் அறிமுகம்

# உச்சநீதி மன்றத்தின் மனித உரிமைத் தீர்ப்புகள்

முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயக அரசுகள் மக்களின் பொது நன்மைக்காக ஆள்வதாகக் காட்டிக்கொள்ள தூக்கிப் பிடிக்கும் ஒரு புனித நூல் அரசியல் சட்ட ஆவணம். மதத்தின் பிடியிலிருந்த மக்களது சிவில் உரிமைகளை விடுவித்த 18-ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் புரட்சியே இத்தகைய சட்ட ஆவணங்களுக்கு முன்னோடி. ஆனால் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்று முழங்கிய அதன் மனித உரிமை சாசனம் உண்மையிலேயே முதலாளிகளுக்கானது என நிரூபித்தது மார்க்சியம்.

பொது மக்களது குடியியல் உரிமைகளையும், அதைக் காக்க வேண்டிய அரசின் கடமை, உரிமை, பொறுப்பு குறித்தும் பணிவான மரியாதையோடு, மனித நேய மொழியில், பக்கம் பக்கமாக வடிக்கப்பட்டிருக்கும் ஆளும் வர்க்கத்தின் நீண்ட 'தத்துவமான' அரசியல் சட்டத்தை பொதுவில் பார்ப்போருக்குக் குறை தெரியாது.

இந்தியாவின் அரசியல் சட்டமும் பொது மக்களது எழுத்துரிமை, பேச்சுரிமை, சங்கமாய்ச் சேரும் உரிமை, இந்தியாவின் எப்பகுதிக்கும் சென்று வரும் உரிமை, சட்டப்பூர்வமான வழியினாலன்றி வேறு எப்படியும் ஒரு நபரின் உயிரையோ சுதந்திரத்தையோ பறிக்க முடியாத உயிர்வாழும் உரிமை, வழிபாட்டு உரிமை இவற்றையெல்லாம் பெருந்தன்மையுடன் உறுதி செய்கிறது. கூடவே சொத்து வாங்கும் - விற்கும் - வைத்திருக்கும் உரிமை, இலாபம் பெறும் உரிமை, முதலீடு செய்யும் உரிமை இன்னபிற உரிமைகளும் உண்டு. இந்த கூடவே வரும் முதலாளிகளின் உரிமைகளைக் காக்கவே அரசியல் சட்டத்தின் பெரும் பகுதி அதாவது அதிபர், பாராளுமன்றம், சட்டமன்றம், அதிகாரவர்க்கம், போலீசு-இராணுவம், நீதிமன்றம் போன்ற அரசு உறுப்புக்களின் கடமையும் உரிமையும் கொண்டதாக நிரப்பப்பட்டிருக்கிறது.



படிப்பகம்

இருந்தாலென்ன, பொது மக்களது உரிமைகள்தான் சட்டப்படி வரையறுக்கப்பட்டிருக்கிறதே அது போதாதா என்கிறீர்களா? நல்லது, சமூக மாற்றம் குறித்து சிந்திக்கும் நீங்கள், இதற்காக சமூக - அரசியல் - தத்துவ கல்வி பயில விரும்பினால் அதை அரசியல் சட்டம் குறித்த ஆய்விலிருந்து தொடங்கலாம். அரசியல் சட்டத்தின் வார்த்தைகளும், வார்த்தைகளுக்கிடையே சிறைபட்டிருக்கும் மறை பொருளும், சட்டப் பிரிவுகளின் உறவும் முரணும், பகுதியில் மறைந்து கொள்ளும் முழுமையும், முழுமையை அறியவிடாத பகுதியும், சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதமும், சமகால அரசியல் - சமூக வாழ்வில் அதன் இருப்பும், இவற்றுக்கு சட்டப்படியே புரிய முடியாத உயர்ரக மொழியோடும் - நடைமுறையோடும் - வியாக்கியானம் செய்யும் கீழ் - மேல் நீதி மன்றங்களும் உண்மையில் யாருக்கு, எதை, எப்படிச் செய்கின்றது என்ற புதிரை விடுவிக்க முயற்சி செய்யுங்கள். வெற்றி பெற்றால் நீங்கள் கற்றுக் கொண்ட ஆய்வும், கண்ணோட்டமும் ஏனைய சமூகப் பிரச்சினைகளைப் பிளந்து பார்க்க உரிய வாளாய்ப் பயன்படும். இனி நூலுக்குள் நுழைவோம்.

இந்திய அரசியல் சட்டம் அளித்திருக்கும் அடிப்படை மனித உரிமை சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தின் முக்கியமான சில தீர்ப்புகள் இங்கே எளிமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதில் ஏழு தீர்ப்புகள் 90-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டவை. காவல் துறையின் கண்காணிப்பு, காவல்நிலைய மரணம், கைதுக்கான காரணம் குறிப்பிடுதல், பாலியல் பலாத்காரத்திற்கு நட்ட ஈடு, கை விலங்கு - மனிதாபிமானமற்ற செயல், மருத்துவ சிகிச்சை மறுப்பது - ஒரு உரிமை மீறல், கைதின் போது பின்பற்ற வேண்டிய 11 கட்டளைகள், பணி இடத்தில் பெண் ஊழியர் பாலியல் பலாத்காரம் என்ற தலைப்புகளில் அந்தத் தீர்ப்புகளின் முழு விவரம் தரப்பட்டுள்ளது.

இவற்றில் சட்டத்தைக் காக்கவேண்டிய அரசு எந்திரம் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு மீறுவது குறித்து நீதிபதிகள் கவலைப்படுகிறார்கள். அந்தக் கவலை மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்களும் அதற்கான மக்கள் போராட்டங்களும் அதிகரிப்பதினால் வருகிறது. எனவே மனித உரிமையின் இலக்கணத்தையும் பொருளையும் அரசியல் சட்டம் வரைந்திருக்கிறது.

இருப்பினும் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பான வழக்கில் குறிப்பிட்ட மனித உரிமை மீறல் உள்ளதா என்பதை சட்டப்படி குறிப்பாகப் புரிந்து கொள்வதில்



சிக்கல் வருகிறது. அதன் பொருட்டு உயிர் வாழும் உரிமை குறித்தும், சுதந்திரத்தின் இருப்பும் இன்றைய நிலவரப்படி என்னவாக இருக்கிறது என்பதறிய ஆக்ஸ்போர்டு அகராதியையும், இங்கிலாந்து, அமெரிக்க நீதிமன்றத் தீர்ப்புகளையும் மேற்கோள் காட்டுகிறார்கள், மாண்புமிகு உச்சநீதி மன்ற நீதிபதிகள்.

இப்படி இந்திய நீதியின் உச்சி அமைப்பே வெள்ளையுலக நீதியைத் துணைக்கழைத்துதான் தனது நீதியை நிலைநாட்ட வேண்டுமா என்று வறட்டுத்தனமாகப் பொருள் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் குறிப்பிட்ட மனுதாரரின் உரிமை மீறலை அவரது வழக்கு விவரங்களினூடாகப் புரிந்து கொள்ள ஏன் முடியவில்லை என்ற கேள்வி எழுகிறது. புரிந்து கொள்வதற்கான அடிப்படை எதுவெனில் சட்டம் காக்கும் அரசு எந்திரத்தின் பாதுகாப்பில் சாதாரண மக்கள் சுதந்திரமாய் வாழ்கிறார்களா, சிறை வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை எதார்த்தமாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்படி எதார்த்தத்தைத் தெரிந்து கொள்ளும் வாழ்க்கை, வர்க்க நலன் நீதிபதிகளுக்கு இருக்குமா இருக்க வேண்டுமா என்பதெல்லாம் நீதியரசர்களுக்குத் தேவைப்படும் தகுதியல்ல.

மாறாக எத்தகைய சிக்கலான வழக்குகளிலும் சட்டத்தின் மேன்மையை சட்டவிதிப்படி நிலைநாட்டுவதே நியாயத் தராசினது செங்குத்து முள்ளின் நடுநிலையாக உள்ளது. எழுதப்பட்ட சட்டமும், பல்வேறு கோணங்களில் வியாக்கியானம் செய்யப்படும் சட்டம் குறித்த தீர்ப்புரைகளும் முரண்படவில்லை என்று நிருபிப்பதே உலகு தழுவிய நல்ல நீதிபதிகளின் இலக்கணமாகக் கருதப்படுகிறது. முற்போக்கானாலும், பிற்போக்கானாலும் தீர்ப்பு களனைத்தும் இதற்கு உட்பட்டே ஆக வேண்டும்.

ஏதோ ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விடுதலையான ஒரு நபரை காவல் துறை தனது குற்றவாளிப் பட்டியலில் சேர்த்து அவர் சாகும் வரை கண்காணிக்கிறது என்றால் இது ஒரு மனித சுதந்திரத்தை மறுக்கும் மீறலல்லவா? இல்லை என்கின்றனர் நீதிபதிகள். காரணம் இந்தக் கண்காணிப்பு அவரது சுதந்திரத்திற்கு நேரடியான பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பதால் சட்டப்படி சரியே என்றும் வாதிடுகின்றனர். போலீசின் கண்காணிப்பு ஒருவரின் சுதந்திரத்தை மறைமுகமாகப் பாதிப்பதில் சட்டப்படி தப்பில்லை என்பதாகவும் புரிந்து கொள்ளலாம். மனித உரிமைகளை போலீசு மறைமுகமாக மீறலாம் என்பதை வெளிப்படையாகக் கூறாத நீதிமன்றம், பகிரங்கமாக அடிப்படை மனித உரிமை மீறப்படவில்லை என்று கூறுவதை நீங்கள் புரிந்து கொள்வது எப்படி?

ஆனாலும் மனித உரிமைமீறல் குறித்த நீதிபதிகளின் கவலை உண்மையானதே. அதை சட்டப்படி களைந்து கொள்வதே அவர்களின் பிரச்சினை. காவல் நிலைய மரணம் குறித்த வழக்கில் அரசு இயந்திரங்கள் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் போது ஓரளவு நிவாரணமாக அமைவது நட்டஈடு பெறும் உரிமையே என்கின்றனர். ஆயினும் நிவாரணம் வழங்க உத்தரவிடும் நீதிமன்றத்திற்கு சட்டப்படி உரிமையுண்டா என்ற பிரச்சினையும் பல சுற்று வழக்குகளைத் தாண்டியே தீர்க்கப்படுகிறது. அரசு ஊழியர்களின் தவற்றுக்கு அரசே பொறுப்பு என்பதாக நிவாரணம் வழங்க உத்தரவாகிறது. அரசு ஊழியர்களிடம் கீழ் மட்டம், மேல் மட்டம் என்று பிரிவுண்டு. அமெரிக்க யூனியன் கார்பைடு நிறுவனம் போபால் விஷ வாயு விபத்தில் கொன்ற குற்றத்திற்கு இன்றுவரை உரிய நிவாரணம் அளிக்கப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, அந்நிறுவனத்தைத் தப்ப வைத்த மேல்மட்ட அரசு 'ஊழியர்கள்' மேல் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நீதிமன்றம் எப்படி விளக்கும்?

"சமுதாயத்தினைப் பாதிக்கும் குற்றங்களில் காவல் நிலைய மரணமே மிக மோசமான குற்றம் என்பதை நீதிமன்றங்கள் மறந்துவிடக்கூடாது, பயங்கரவாதத்திற்கு அரசு பயங்கரவாதம் தீர்வாக முடியாது" என்றெல்லாம் கவலைப்படும் உச்சநீதிமன்றம் இந்தப் பிரச்சினையில் நட்டஈடு வாங்கித் தருவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியுமா?

முதலில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சித்திரவதை குறித்த விளக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கிடையாது. அடுத்து போலீசின் 'குடும்ப' ஒற்றுமை காரணமாக போலீசின் சித்திர வதை மரணம் குறித்த புகார்கள் அதிகம் எழுவதில்லை. அதாவது சக போலீசின் கொலை குறித்த புகாரினை வேறொரு போலீசு விசாரிக்காமல் சட்ட நுணுக்கங்களால் மூடி மறைக்கும். தவிர்க்கும். மருத்துவர்கள் பொய்யான காரணங்களை சட்டம் கண்டு கொள்ள முடியாதபடி ஆனால் சட்டப்படி தயாரிப்பர். கீழ் நீதிமன்றங்களும் இது காவல்நிலைய மரணமில்லை என்று சட்டப்படி தீர்ப்பளிக்கும்.

மேல்முறையீட்டில் இது காவல் நிலைய மரணமே என்று தீர்ப்பளிக்கும் உச்சநீதி மன்றம். மேற்கண்ட போலீசு - மருத்துவ - கீழ் நீதிமன்றங்களை ஏதும் செய்ய முடியாது. அதிகபட்சம் மரியாதைக்குரிய (கீழ் நீதிமன்ற) நீதிபதி அளித்திருக்கும் தீர்ப்பும், ஆய்வும் தவறான செயல் என்று மட்டும் சுட்டிக் காட்டலாம். பல்வேறு வழக்குகளில் அரசு - போலீசு - நீதி நிர்வாக அமைப்புகளின் அப்பட்டமான மோசடிகள் கண்ணுக்குத் தெரிந்தாலும் உச்ச நீதிமன்றம் தன் கண்ணையே குத்திக் கொள்ள முடியுமா என்ன?

''மனித உரிமைகளின் பரிமாணம் விரிந்து கொண்டே இருக்கிறது. அதே வேளை குற்றங்களின் விகிதாச்சாரமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இரண்டிற்குமான சமநிலை காப்பது எப்படி?'' இதுவும் உச்சநீதிமன்ற நீதியரசர்களின் கவலைதான். ஒரேயடியாக மனித உரிமை பேசிக் கொண்டிருந்தால் குற்றம் அதிகரித்து விடுமே என்பதே இதன் பொருள். அதாவது அரசின் நேரடிக் குற்றத்தை (சித்ர வதை, லாக்அப் கொலை, துப்பாக்கிச் சூடு) தவறென அதிகம் கண்டிக்க முடியாது என்பதற்கு சமூகக் குற்றங்களை வைத்து (கொலை, கொள்ளை, 'பயங்கரவாதம்') நேரெதிராகக் கேடயம் போல நிறுத்துகிறார்கள். இந்தச் சமூகக் குற்றங்களும் அரசின் கொள்கைப் பிரதிபலிப்பே என்ற வகையில் இது அரசின் மறைமுகக் குற்றம்தான். மேலும் அரசின் நேரடிக் குற்றங்களுக்கு அதன் உறுப்பு - ஊழியர்களுக்கு எந்தத் தண்டனையும் சட்டப்படி கிடையாது. ஆனால் அரசின் மறைமுகக் குற்றங்களுக்கு அதாவது பொது மக்களுக்கு பல டஜன் தண்டனைகள் உண்டு.

எனவே குற்றம் மனித உரிமை என்ற கொள்கைப் பிரச்சினையை உச்ச நீதி மன்றம் கையாளும் விதம் எப்படி இருக்கிறது? மனித உரிமை மீறல்களுக்காக உலக நாடுகளின் நீதிமன்றத் தீர்ப்புக்களை வைத்து வியாக்கியானம் செய்து கொஞ்சம் பணம் கொடுக்கிறார்கள். மற்றபடி இந்த மனித உரிமை மீறல்களுக்காக சட்ட திருத்தம் செய்ய வேண்டும் என்று வலி




யுறுத்தாமல், சட்டத்திற்கு பதில் சில நெறிப்படுத்துதல்களை அனைத்து நீதிமன்றங்களும் கையாள வேண்டும் என்கிறார்கள். இந்த நெறிப்படுத்துதலை மீறுகின்றவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கலாம் என்று ஆறுதலும் தருகின்றனர்.

அப்படி கீழ் நீதிமன்றங்களும் - போலீசும் உச்சநீதி மன்றத்தின் வழிகாட்டுதலை ஏற்காமல் மீறித்தான் செயல்படுகின்றன. 'நீதிமன்றம் கூறியுள்ள வழிகாட்டல்களையும், நெறிமுறைகளையும் காவல் துறை, சிறைத்துறை, கீழ்மட்ட நீதிமன்றம் கடைபிடிப்பதில்லை என்பது கவலை தரும் நிகழ்ச்சியாகும்' என்று உச்சநீதி மன்றமே அதை ஒத்துக் கொள்கிறது. ஒரு நபரை தடுப்புக் காவலில் வைக்க கைது செய்ய வேண்டுமானால் 11 கட்டளைகளை (அதற்கான சட்டவிதிகள் உருவாக்கும் வரை) கடைபிடிக்க வேண்டும் என்ற 96-ஆம் ஆண்டின் வழக்கொன்றில் உத்தரவிட்டது உச்சநீதி மன்றம்.

''சமுதாயத்தினைப் பாதிக்கும் குற்றங்களில் காவல் நிலைய மரணமே மிக மோசமான குற்றம் என்பதை நீதிமன்றங்கள் மறந்துவிடக்கூடாது, பயங்கரவாதத்திற்கு அரசு பயங்கரவாதம் தீர்வாக முடியாது'' என்றெல்லாம் கவலைப்படும் உச்சநீதிமன்றம் இந்தப் பிரச்சினையில் நட்டஈடு வாங்கித் தருவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியுமா?

1984-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் ராயல் கமிஷன் ஒரு நபர் கைது செய்யப்படும் போது அவருக்கு உரிய உரிமைகள், கைது செய்யும் போலீசு செய்ய வேண்டிய கடமைகள் பற்றிய பரிந்துரைகளை அளித்தது. அதுவே 96-ஆம் ஆண்டின் உச்சநீதி மன்ற 11 கட்டளைகளாக அவதாரமெடுத்திருக்கிறது. இந்த 11 கட்டளைகளை அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கு தெரிவிக்க வேண்டும், பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரம், வானொலி, வானொளி மூலமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றெல்லாம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் கருணாநிதியின் கைதில் கூட இந்தக் 'கட்டளைகள்' பின்பற்றப்படவில்லை என்பதைத்தான் டி.வி.யில் பார்த்தோம். உச்சநீதி மன்ற நீதிபதிகளும் பார்த்திருக்கக் கூடும். நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்காக அவர்கள் காத்திருக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஆனால் இங்கே நீதி மரியாதைக்குரியதாக இல்லை என்பது மட்டும் உண்மை.

உச்ச நீதிமன்றத்தின் மனித உரிமை பற்றிய முற்போக்குத் தீர்ப்புகளே இப்படி இருக்கும்போது ஏனைய பெரும்பகுதி தீர்ப்புகள் எப்படியிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நமது நாட்டின் அரசியல் வாழ்க்கையை மனிதத் தன்மை கொண்டதாக மாற்றுவதற்கு இன்றைய நீதி அமைப்பு உதவ முடியாது என்பதையே இந்நூலில் உள்ள தீர்ப்புகள் காட்டுகின்றன. எனில் நமக்குரிய நீதியைத் தேடிச் செல்லும் வழிகள் குறித்து ஆராய்வதின் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகின்றன.

● வேல்ராசன்

**நூல் :**
**உச்சநீதிமன்றத்தின் மனித உரிமைத் தீர்ப்புகள்**

**தொகுப்பாசிரியர்கள் :**
**அ. மகபூப் பாட்சா,**
**பொன். கிருஷ்ண சுவாமி**

**தமிழாக்கம் :**
**பொன். கிருஷ்ணசுவாமி**

**நன்கொடை :**
**ரூ. 40/**

**வெளியீடு :**
**சோக்கோ அறக்கட்டளை,**
**ஜஸ்டிஸ் பகவதிபவன்,**
**லேக் வியூ ரோடு, கே.கே. நகர்,**
**மதுரை - 625 020.**
**☎: 0452-583962**



படிப்பகம்

www.padippakam.com

# எடுக்காமல் போன ஒரு விவரணப் படம்

வெளிநாட்டிற்குச் சென்று திரும்பி வந்த எனது மைத்துனர் கொண்டு வந்த பரிசுப் பொருளை எனக்குப் பிரித்துக் காட்டியபோது பிரமிப்பாக இருந்தது. கருப்பு வண்ணத்தில் பளிச்சென்று மின்னியது அந்த பானாசோனிக் வீடியோ காமிரா.

துறை சார்ந்த நல்ல டாக்குமென்டரி படங்கள் எடுத்தால் என்ன? வான்வழித் தொலைக்காட்சி ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் தொலைக்காட்சி அன்றாட வாழ்வில் தவிர்க்க இயலாததொன்றாகி விட்டது. பல தொலைக்காட்சி நிறுவனங்களுக்கிடையே போட்டி இருந்தாலும் நல்ல விஷயங்களுக்கு மட்டும் பஞ்சம் இன்னமும் இருக்கிறதே. எனவே மக்களுக்கு அறிவூட்டும் நல்ல விவரணப் படங்கள் எடுத்துப் பார்க்கலாமே என்ற ஆசை பிறந்தது. ஒரு யூமேட்டிக் காமிரா வாங்க ஆசைப்பட்டு விலை கேட்டதும் அந்த ஆசையை அப்படியே கிடப்பில் போட்டுவிட நேர்ந்தது.

இதோ இப்போது அந்த ஆசை கண்முன்னே மின்னிக் கொண்டிருக்கிறது.

மறுநாளே நண்பர்களுடன் தொடர்பு கொண்டேன். அந்த வார ஓய்வில் நாங்கள் கூடி ஆராய்ந்தோம். "என்ன டாக்குமென்டரி முதலில் எடுக்கலாம்?"

"அந்த ஆண்டாள் பாடல் ஸ்கிரிப்ட் மொதல்ல பண்ணலாமா?"

"வேண்டாம் அதுக்கு நிறைய பணம் செலவாகும். ஆர்ட்டிஸ்டும் அதிகம் வேணும்."

"அதனால ஏதாவது மெடிக்கல் டாக்குமென்டரி பண்ணலாம்."

"அப்ப அந்த எஸ்.டி.டி. ஸ்கிரிப்ட்ட மொதல்ல பண்ணலாமா?"

"அது வேண்டாம் இப்பத்தான் எஸ்.டி.டி., எய்ட்ஸ்னு அரசாங்கமே நிறைய பண்ணியிருக்காங்களே."

"முதல்ல அந்த ரேபிஸ் பத்தின ஸ்கிரிப்ட் பண்ணலாமே."

"வெறிநாய்க்கடி பத்தியா? அந்த சப்ஜெக்ட் ரொம்ப ட்ரையா இருக்காதா?"

"இல்ல நாம எல்லார மாதிரியும் செய்தி சொல்லப் போறது இல்ல, புதுசா வேற கோணத்தில சொல்லப் போறோம். முதல்ல பத்து, பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி வெறிநாய்க்கடியால பாதிக்கப்பட்டு இறந்து போனவங்க அட்ரச கண்டுபிடிக்கணும். அப்புறம் அந்தக் குடும்பத்தைத் தேடிப் போய் அவர்களோட இழப்பு, அதன் பாதிப்பு பற்றி பதிவு செய்யலாம். உலகத்திலேயே வெறிநாய்க் கடியால அதிக மக்கள் சாவுறது நம்ம நாட்டுலதான். எனக்குத் தெரிஞ்சே இந்த நோயால் தாயை இழந்த பிள்ளைகளும், மக்களை இழந்த பெற்றோர்களும், தலைவனை இழந்த குடும்பங்களும் ஏராளம்.

"எனக்கு ஒரு சந்தேகம். இது நல்லா வருமா?" ஒருவர் சந்தேகத்தைக் கிளப்பினார்.

"ஏன் வராது? எனக்குத் தெரிந்த ஒரு கதையைச் சொல்றேன். கேளுங்க!"

• ○ •

நான் தஞ்சாவூர் ராஜா மிராசுதாரர் ஆஸ்பத்திரில ஹவுஸ் சர்ஜனா இருந்தப்ப நடந்தது. ஆனா இன்னமும் தெளிவா ஞாபகம் இருக்கு.

அந்தப் பொண்ணு பேர் கூட ஏதோ பூர்விசான்னு நெனைக்கிறேன். ரொம்ப வித்தியாசமான பேரு. ஏதோ கிராமத்து தேவதையோட பேரா இருக்கணும். அந்தப் பொண்ணுக்கு பத்து, பன்னென்டு வயசுதான் இருக்கும். நான் தொற்று நோய் பகுதியில ட்யூட்டில இருந்தப்ப ரேபிஸ் செல்லுக்கு அந்தப் பொண்ணை கொண்டு வந்தாங்க. பேந்த, பேந்த முழிச்சுகிட்டே வந்தது. அந்தப் பொண்ணோட அம்மா அதவிட பாவம். அதுக்கு ஒன்னுமே புரியல. பொண்ண கம்பிக்கு அந்தாண்ட ஜெயில் மாதிரி அடைச்சு வச்சதுல இருந்து அழுதுகிட்டே இருந்தது. எனக்கு ரொம்ப பாவமா இருந்துச்சி. நான் போய் விசாரிச்சேன்.

**வான்வழித் தொலைக்காட்சி ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் தொலைக்காட்சி அன்றாட வாழ்வில் தவிர்க்க இயலாததொன்றாகிவிட்டது. பல தொலைக்காட்சி நிறுவனங்களுக்கிடையே போட்டி இருந்தாலும் நல்ல விஷயங்களுக்கு மட்டும் பஞ்சம் இன்னமும் இருக்கிறதே. எனவே மக்களுக்கு அறிவூட்டும் நல்ல விவரணப் படங்கள் எடுத்துப் பார்க்கலாமே என்ற ஆசை பிறந்தது.**

ஒரத்தநாட்டுக்குப் பக்கத்துலயாம் அவங்க வீடு. பத்தாவது வரைக்கும் படிச்ச பொண்ணாம். ஆனா படிக்காத ஒரு பண்ண வீட்டுப் பையனுக்கு கட்டி வச்சிட்டாங்களாம். நில, புலம் இருக்குறதால பையனுக்கு வேற வேல ஏதும் கிடையாதாம். ஒரே குடி, கூத்தின்னு அலைஞ்சிருக்கான். அதனால ஒரு பொண்ண பெத்ததும் இதுவே போதும்னு இந்தப் பொண்ணே முடிவு பண்ணிருச்சாம்.

இந்தக் கொடுமையில நமக்கு இனிமே குழந்தைகளே வேண்டாம்னுட்டு. அதனால குடும்பத்துல உள்ளவங்க எதிர்ப்பையும் மீறி இந்தப் பொண்ணு பொறந்த உடனேயே குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் பண்ணிடிச்சாம். பொண்ணு கொஞ்சம் பெரியவளா ஆனதும் அதுங்கூட வெளையாட வேற புள்ளைங்க இல்லியேங்கிற கவலையை மாத்த ஒரு நாய்குட்டியை வாங்கி வீட்ல வளர்த்திருக்கு. இப்போது அது கடிச்சுதான் இந்தப் பொண்ணுக்கு ரேபிஸ் வந்திருக்கு. தன்னோட வாழ்க்கை இப்படி நாசமா போச்சேன்னு அது தலையில அடிச்சிகிட்டு அழுதது. இன்னமும் என் காதுல கேட்டுகிட்டு இருக்கிற மாதிரி இருக்கு.

இந்த மாதிரி எத்தனைக் கதைகள் புதைஞ்சி கிடக்கோ. நாம இப்ப அந்தப் பொண்ணோட நிலைமை எப்படி இருக்குங்கிறதுல இருந்து நம்ம படத்தை ஆரம்பிக்கலாம்.

— இந்தக் கதை எனது நண்பர்களைப் பாதித்திருக்க வேண்டும். அனைவரும் பேச்சற்று இருந்தனர்.

"பாவி மவ கதி என்ன ஆச்சோ!" என வாய்விட்டே ஆதங்கப்பட்டார் ஒருவர்.

"ஆனா அந்த அட்ரசெல்லாம் எப்படி டிரேஸ் பண்ணுவீங்க?"

"இது நடந்த வருஷம் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. 1985 ஜூன் மாசம். நாம ராஜாமிராசுதார் மருத்துவமனை ரெக்கார்ட்ரூம் போனா அந்த பொண்ணோட அட்ரச் கண்டுபிடிச்சுரலாம். அத்தோட மத்த ரேபிஸ் கேஸ் பத்தின விவரங்களும், விலாசங்களும் நமக்கு அங்க கிடைக்கும்."


படிப்பகம்

www.padippakam.com

ஒரு வேலைநாளில் விடுப்பு எடுத்துக் கொண்டு மூன்று நண்பர்களுடன் ஆர்.எம்.எச் மருத்துவமனை வளாகத்தை அடைந்தோம். ரெக்கார்ட் ரூம் கிளார்க் 'சினிமா' என்றதும் ரொம்பவே உதவினார். தனக்கும் இதில் இடம் உண்டா என அடிக் கடி வினவினார். அவர் உதவியுடன் 10 விலாசங்கள் கிடைத்தன.

பூர்விசாவின் விலாசம் பட்டுக் கோட்டை அருகில் உள்ள கண்டரங் கோட்டை எனும் கிராமமாக இருந்தது. ஒரத்தநாடு தாண்டியதும் வழியில் இறங்கி வயல்வழிப் பாதையில் இரண்டு, மூன்று கிலோ மீட்டர்கள் நடக்க வேண்டும் என்று விவரம் சொன்னார்கள்.

அடுத்த ஞாயிறு நாங்கள் எங்களை அந்தப் பயணத்திற்குத் தயார் செய்து கொண்டோம். பேருந்து ஒரத்தநாட்டைத் தாண்டியதும் நண்பர் எழுந்து நடத்துனரை அணுகினார்.

''சார் பஸ் அங்கெல்லாம் நிக்காது; நீங்க டவுன் பஸ்சா பாத்து ஏறியிருக் கணும்.''

''இல்லீங்க ஒரு டாக்குமெண்டரி சினிமா எடுக்கப் போறோம். அதுக்கு இடம் பாக்கலாம்னுதான்; நீங்க உதவி செய்யணும்''. நண்பர் முடிக்குமுன் நடத் துனர் க்ண்களில் ஒரு ஒளி பளிச்சிட்டது.

''சினிமாவா சார்'' ''கண்டரங் கோட்டையிலா?'' அது பக்கா கிராம மாச்சே சார். எந்த கம்பெனி படம் சார், யார் படம் சார்?''

நிறைய பேருக்கு டாக்குமெண்டரி படமும் சினிமாப் படமாகவே பட்டது.

''நீங்க எங்கள இப்ப இறக்கி விடுங்க. நாங்க அடுத்த வாட்டி வர்றச்ச உங்க பஸ்சு லேயே வந்து எல்லாம் விலாவரியா சொல்றோம்.''

கண்டரங்கோட்டை விலக்கில் பஸ்சை நிற்கச் சொல்லி உற்சாகமாக விசில் ஊதினார்.

சுமார் ஒண்ணரை கிலோ மீட்டர் தூரம் பசுமையான வயல்களுக்கும், சலசலக்கும் வாய்க்கால்களுக்கும் இடையில் நடந்தோம். வழியில் சிறிய தென்னந் தோப்பு ஒன்று குறுக்கிட்டது. அதற்குள் யாரோ இருப்பதுபோல் தென்பட அவ ரிடம் விசாரிக்கலாமே என்று உள்ளே நுழைந்தோம். அருகில் நெருங்கியதும் தான் தெரிந்தது, அது ஒரு மனநோயாளி என்று.

எங்களைப் பார்த்ததும் அப்பெண் இளித்தது. அவள் வாய் ஓரம் எச்சில் ஒழு கியது. தேய்க்காத பற்கள் சிதைந்து விகாரமாகவும் தெரிந்தது. திடீரென எங்களைப் பார்த்தவாறு ஓவென்று ஓலமிட்டது. பின்னர் இரண்டு கைகளாலும் தன் மார்பில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டது. பிறகு கெக் கெக் என சிரித்தவாறு இரண்டு கைக ளாலும் மண்ணை அள்ளி தனது தலையில் இறைத்துக் கொண்டது. சிக்கலும் பிக்கலு மான தலைமுடியிலிருந்து சிதறி விழுந்த மண் கண்களிலும் வாயிலும் நிறைந்து நின்றது. பின்னர் தலையைச் சிலுப்பிக் கொண்டதும் மண் துகள்கள் அவளைச் சுற்றி தெறித்துப் பறந்தன.

**நான் தொற்று நோய் பகுதியில ட்யூட்டில இருந்தப்ப ரேபிஸ் செல்லுக்கு அந்தப் பொண்ணை கொண்டு வந்தாங்க. பேந்த, பேந்த முழிச்சுகிட்டே வந்தது. அந்தப் பொண்ணோட அம்மா அதவிட பாவம். அதுக்கு ஒண்ணுமே புரியல. பொண்ண கம்பிக்கு அந்தாண்ட ஜெயில் மாதிரி அடைச்சு வச்சதுல இருந்து அழுதுகிட்டே இருந்தது.**

இயல்பு வாழ்க்கையில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத செயல்களை அப்பெண் செய்ததைக் கண்டு திகைத்துப் போனோம். உதவுவதற்கும் வழியில்லை.

பேச்சற்று மேலே நடக்க ஆரம் பித்தோம். எங்களுக்குப் பின்னே அந்தப் பெண் 'ஊ'வென ஊளையிடும் சத்தம் கேட்டது.

**எங்களைப் பார்த்ததும் அப்பெண் இளித்தது. அவள் வாய் ஓரம் எச்சில் ஒழுகியது. தேய்க்காத பற்கள் சிதைந்து விகாரமாகவும் தெரிந்தது. திடீரென எங்களைப் பார்த்த வாறு ஓவென்று ஓலமிட்டது. பின்னர் இரண்டு கைகளாலும் தன் மார்பில் ஓங்கி ஓங்கி அறைந்து கொண்டது. பிறகு கெக் கெக் என சிரித்தவாறு இரண்டு கைகளாலும் மண்ணை அள்ளி தனது தலையில் இறைத்துக் கொண்டது.**

மேலும் ஒரு கால் மணிநேர நடைக்குப் பிறகு ஊர் தென்பட்டது. அருகில் மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த ஒருவரிடம் ''ஐயா, இந்த மணிசேகரன்ங்கறவரோட வீடு எங்கங்க இருக்கு'' என்றோம்.

''ஐயாக்கமாரு வீடுங்களா, இப்படி தெக்கால போயி கிழக்கால திரும்புனீங் கன்னா பச்ச கேட்டு போட்ட பெரிய வீடு இருக்குமுங்க, அதாங்க அந்த ஐயா வீடு.''

திரும்பியதும் பச்சை நிற வீடு வந்தது. வெவ்வேறு வயதுப் பருவத்திலுள்ள நான்கைந்து குழந்தைகள் அந்த வீட்டின் முன்னர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

''பாப்பா மணிசேகரன் வீடு இது தானே?''

''ஆமா எங்க அப்பாதான் அது''

''அப்படியா நல்ல பொண்ணு. உங்க அப்பா வீட்ல இருக்காங்களா?''

''இல்லியே அப்பா டவுனுக்குப் போயிருக்காங்க''

''சரஸ்வதின்னு அவங்க சம்சாரம் இருக்காங்களா?''

''ஐய்யய சரஸ்வதின்னு எங்க அப்பா வுக்கு சம்சாரம் கிடையாது. எங்க அம்மா பேரு முத்துலட்சுமி.''

''அப்படியா ஆனா சரஸ்வதின்னு ஒருத்தங்க இந்த வீட்ல இருக்காங்களா. நாங்க அவங்களைப் பார்க்க வந்தி ருக்கோம்.''

''இல்லியே அப்படி யாரும் எங்க வீட்ல கிடையாதுங்க. அம்மா, அம்மா யாரோ வந்திருக்காங்க பாரும்மா'' என்று கத்தியபடி குழந்தைகள் வீட்டிற்குள் ஓட நாங்கள் வாசலில் காத்திருந்தோம்.

நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி அடுக்களை அழுக்குகளை முந்தானையில் துடைத்தவாறு எரிச்சலுடன் வந்து எட்டிப் பார்த்து ''யார் வேணும் உங்களுக்கு?''

''சரஸ்வதி இருக்காங்களா?''

''அப்படி யாரும் இந்த வீட்ல கிடையா துங்க.''

''இது மணிசேகரன் வீடுதானுங் களே?''

''ஆமா''

''அவங்க மொத சம்சாரத்தோட பேரு சரஸ்வதி தானுங்களே''

அந்தப் பெண் அவசரம் அவசரமாக ''அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க அப்படி யாரும் இங்கே கிடையாது'' என்றபடி கோபத்துடன் திரும்பிச் சென்றாள்.



படிப்பகம்

எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

திரும்பி நடக்க ஆரம்பித்ததும் எங்களையே உற்றுக்கவனித்துக் கொண்டிருந்த பாட்டியொருத்தி அருகிலிருந்த வீடு ஒன்றிலிருந்து வெளியே வந்தாள்.

எங்கள் அருகில் வந்ததும் ''யாரையா நீங்கெல்லாம்? என்ன வேணும்?''

''இல்லம்மா இந்த மணிசேகர் இருக்காருல்ல அவரோட மொத சம்சாரம் ஒருத்தங்க சரஸ்வதின்னு இருந்தாங்கல்ல அவங்களைப் பாக்கலாம்னு வந்தோம். உங்களுக்குத் தெரியுமா? அவங்க பொண்ணுகூட ஒண்ணு நாய் கடிச்சு செத்துப் போச்சே ஞாபகம் இருக்கா? அந்தம்மா இது மணிசேகரன் வீடுதாங்கிறாங்க, ஆனா சரஸ்வதின்னு யாரையும் தெரியாதுங்கிறாங்க; அதான் ஒண்ணும் விளங்கல.''

''அவ ராட்சசிப்பா. அவ அப்படித்தான் சொல்லுவா. ஆமா நீங்க ரோட்டு பஸ்சுல தான வந்தீங்க. பஸ்சுல எறங்கி நடந்து வந்தப்ப கேணிக்கரை ஓரமா தென்னந்தோப்புல ஒரு பைத்தியக்காரப் பொண்ண பாத்துருப்பீங்களே அது தான்யா மணிசேகரோட முத சம்சாரம் சரஸ்வதி.''

''பாவிமக ஒரு பொண்ண பெத்தவுடனேயே குடும்பக் கட்டப்பாடு பண்ணிக்கிட்டா. குடிகாரப் பயகிட்ட குடும்பம் நடத்தப் பயந்துகிட்டு இந்தக் காரியம் பண்ணிகிச்சு. படிச்ச பொண்ணு பாவம், தம் பிள்ளைக்கு துணையா இருக்கட்டுமேன்னு வளர்த்த நாய் கடிச்சு அவ பொண்ணு செத்துப் போனதும் அவ வாழ்க்கையே நாசமாப் போச்சு.

''பொண்ணு செத்த கொஞ்ச நாள்ல வாரிசு வேணும்னு காரணம் காட்டி அந்த குடிகாரப் பய ரெண்டாந்தாரம் கல்யாணம் பண்ணிகிட்டான். அப்புறம் ரெண்டு பேரும் சேர்ந்துகிட்டு பண்ணின பாட்டுல அந்தப் பொண்ணு இப்ப மண்ணத் துன்னுகிட்டு அலையுது'' தலையில் அடித்துக் கொண்டாள் பாட்டி.

மௌனமாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தோம். தோப்பை நெருங்கிய பின்னரும் அதை நிமிர்ந்து பார்க்கும் மன நிலையில் நாங்கள் இல்லை. எங்களுக்குப் பின்னே அந்தப் பெண்ணின் 'ஊ' என்ற ஊளைச் சத்தம் மட்டும் கேட்டது. நீண்ட நாட்கள் நினைவில் ஒலித்துக் கொண்டிருந்த அந்த சத்தத்தின் காரணமாகவோ என்னவோ என்னால் அந்த விவரணப் படத்தை எடுக்க இயலவேயில்லை.

• சிவசுப்ரமணிய ஜெயசேகர்

# கின்லே

விரிந்து கிடக்கும்
தண்டவாள உதடுகளுக்கிடையே
ரயில் பெட்டிகள் பேசிக் கொள்ளும் மொழியின்
அர்த்தம் தேடி அலைந்தது மனது.

திசுக்களால் ஆன
பாராளுமன்ற வாதிகளின் இதழ்களில் இருந்து
வெளிவரும் பட்ஜெட் உரையை விட
இரும்பு இதழ்களிலிருந்து பெறப்படும்
ரயில் பயணத்தின் ஓசைகள்
மனதுக்கு இதமானவை.
கூடவே ரயிலில்
பயணம் செய்தவர்களின் குரல்கள்
கொஞ்சம் கொஞ்சமாய்த் திசைதிருப்பியது
என்னை.

கொடுத்த காசுக்கு இடம்பிடிக்கத் தெரியாது
குத்துக்காலிட்டு வழியில் கிடந்த பெரியவர்
தயங்கித் தயங்கி
இருக்கையிலிருந்தவரிடம் இறைஞ்சினார்.

''கொஞ்சம் குடிக்க தண்ணி தாங்க''
இரட்டுற மொழிதலில் பதில் வந்தது...

''இது பாட்டில் தண்ணிய்யா''

உள்ளுறை உவமம் அறியாப் பெரியவர்
''பாட்டில் தண்ணியா பரவாயில்லை
கொடுங்க''
என ஆவலாய்க் கை நீட்ட

''பனிரெண்டு ரூவா கொடுத்து வாங்கின்
பாட்டில் தண்ணிய்யா
என்னவோ ஈசியா கேக்குற!''

ஈரப்பசையற்ற வார்த்தைகள் எதிர்பாய
மீறிட்டு வந்த பெரியவரின் தாகம்
தன்மானத்தோடு தொண்டைக் குழியிலேயே
தற்கொலையானது.

தண்ணீரால் ஒரு மனிதனின் இதயத்தை
இரும்பாக்க முடியும் என்ற ரசவாதத்தைக்
கண்ட எனக்கு,
சில இரும்பு இதயங்களை
இழுத்துக் கொண்டு ஓடும்,
அவலம் தாங்காது அலறும் பெட்டியின்
அர்த்தம் புரிந்தது அப்போது.

• துரை. சண்முகம்

கின்லே - கோக்கோ கோலாவின்
தாது நீர் (மினரல் வாட்டர்) பாட்டில் பெயர்.



www.padippakam.com

www.padippakam.com

நல்லகாலம் கெட்டகாலம்
இரண்டையும் பார்த்துவிட்டோம்

சன்னலின் வழியே
தப்பிப் பறக்கிறது நம்பிக்கை

அதிருஷ்டம் – அதுவோ
கதவைத் திறந்துகொண்டு
வெளியேறுகிறது.

புரிந்து கொண்டோம்
போகப்போக எல்லாம்
சரியாகிவிடும்
என்பதை மட்டும்
நம்பக்கூடாதெனப்
புரிந்து கொண்டோம்

ஏனென்றால்
நாங்கள் இன்னும்
எதையும் காணவில்லை.

கைகள் கட்டப்படவில்லை
சுதந்திரம்!

ஆட்டம் என்னவோ
பழைய கோமாளி ஆட்டம்தான்.

ஓட்டம்... கால்கள் தரிக்காத ஓட்டம்
எங்கும் போய்ச் சேராத ஓட்டம்

புதிய பக்கம் – பழைய புத்தகம்
புதிய ஆட்டம் – அதே பழைய விதிகள்

விளக்கொளி தணிந்து
இருள்கிறது மேடை

இன்னும் எதையும் காணவில்லை நாங்கள்

சேணத்தில் பூட்டப்பட்டிருக்கின்றது
நொறுங்கிப்போன வாழ்க்கை

நாற்பது ஏக்கர் நிலம்
நாற்பது அவுன்சு சாராயமாகித்
தொண்டையில் இறங்குகிறது.
இதுதான் நீதி போலும்!

போலீசு வண்டிகளின் ஊளைச் சத்தம்
அழுகுரலாய்த் தேய்ந்து கரைகிறது
சுதந்திரதேவிக் கைச்சுடரின்
நிழல் மறைவில்

அதோ... கரைக்கு அப்பால்
தொடுவானத்தில்
மெல்லக் கடலில் மூழ்குகின்றன
எங்களைப் பிணைத்து வந்த படகுகள்

இன்னும்
நாங்கள் எதையும் காணவில்லை.

குற்றமாய்க் கனக்கிறது வாழ்க்கை

இது வரமா இல்லை சாபமா
என் விருப்பமா இல்லை வெறுப்பா
இதைக் கைப்பற்றினேனா
பிடுங்கியெறியப்பட்டேனா

ஓடிவிடத் துடிக்கிறேன்
எங்கே ஓடுவேன்
போகுமிடம் எதுவுமில்லை

நின்றுதான் தீரவேண்டும்
முழந்தாளில் சரியமாட்டேன்
நிற்பேன் போராடுவேன்

உன்னதமான காலம் வரத்தான் போகிறதென்று
நம்பிக்கை கொள்வேன்.
இறைஞ்சுவேன்

ஏனென்றால்
நாங்கள் எதையும் காணவில்லை
இன்னும்.

— டிரேஸி சாப்மன்

# எதையும் காணவில்லை... இன்னும்


படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கக் கருப்பினப் பாடகி டிரேஸி சாப்மனின் பாடல்களை அவ்வப்போது வெளியிட்டிருக்கிறோம். அவரது சமீபத்திய பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது இந்தப் பாடல்.

சொற்களின் பொருளை முந்திக் கொண்டு நுழைந்து இதயத்தைப் பிசைய வல்லது சாப்மனின் குரல். அமெரிக்கக் கருப்பின மக்களின் ஏமாற்றமும் குமுறலும் அவரது குரலின் மீதே ரேகைகளாய்ப் பதிந்துள்ளன.

எனினும், இந்தப் பாடலின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு அமெரிக்க ஆங்கில வழக்கு, கருப்பின மக்களின் வாழ்க்கை அனுபவம், குறிப்பான வரலாறு ஆகியவை குறித்துத் தெரிந்திருப்பது அவசியமாக இருந்தது.

இணையத்தின் மூலம் அறிமுகமான ஒரு தோழர் - கலிபோர்னியா மாநிலத்தில் தோட்டத் தொழிலாளி - விளக்கம் தந்து உதவினார். விளக்கத்தைச் சொற்களுக்கான அடிக்குறிப்பாகத் தருவதைக் காட்டிலும் கீழ்க்கண்ட வடிவத்தில் தருவது வாசகர்களுக்குப் பயனுள்ளதெனக் கருதுகிறோம்.

***

முந்நூறு ஆண்டுகள் உழைத்து மடிந்து அமெரிக்கா எனும் நாட்டை உருவாக்கிய கருப்பினம் தலைமுறை தலைமுறையாக வஞ்சிக்கப்பட்டது. ஆபிரகாம் லிங்கனின் விடுதலைப் பிரகடனத்தில் தொடங்கி கருப்பினத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங் வரை பலரது நம்பிக்கையூட்டும் பிரகடனங்களையும், முதலாளித்துவ அறிஞர்கள் - பாதிரிகளின் வாக்குறுதிகளையும் கேட்டுச் சலித்து விட்டனர் கருப்பின மக்கள்.

வெள்ளை நிறவெறியையும் வறுமையையும் அமெரிக்க ஜனநாயகம் ஒழித்து விடும் என்ற நம்பிக்கையை கருப்பின மக்கள் மீது எவ்வளவுதான் முயன்று திணித்தாலும்... தப்பிப் பறக்கிறது அவர்களது நம்பிக்கை.

அடிமை முறை ஒழிந்து விட்டது என்று ஜம்பம் பேசும் வெள்ளை ஆளும் வர்க்கத்தின் மீதும், இதைச் 'சுதந்திரம்' என்று நம்பும் கருப்பின நடுத்தர வர்க்கத்தின் மீதும் சாட்டையாய் இறங்குகிறது சாப்மனின் குரல். ''கைகள் கட்டவிழ்ந்தாலும் ஆடுவதென்னவோ கோமாளி ஆட்டம் தான்.''

1960-களில் கருப்பர்களைக் கைதூக்கி விடுவதாக அமெரிக்கா பீற்றிக் கொண்ட காலத்தில், சினிமா மற்றும் பொழுதுபோக்குத் துறைகளில் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அங்கும் அவர்கள்



முட்டாள்களாகவும், கோமாளிகளாகவும், நாகரிகமற்றவர்களாகவும்தான் சித்தரிக்கப்பட்டார்கள். அன்று மேடையில் கருப்பர்கள் ஆடிய ''ஷஃப்லிங்'' என்றொரு நடனத்தைக் குறிப்பிட்டு, இன்று ஆடிக் கொண்டிருப்பதும் அதே ஆட்டம்தான் என்ற உண்மையை ''விளக்கொளி தணியும் மேடையின்'' அயர்ச்சியுடன் வெளியிடுகிறார் சாப்மன்.

''நொறுங்கிப் போன வாழ்க்கை'' என்ற சொல்லின் முழுப்பரிமாணத்தையும் உணர வேண்டுமானால் அமெரிக்கக் கருப்பின மக்களின் வரலாறு கொஞ்சமாவது தெரிந்திருக்க வேண்டும். 'ஏழு தலைமுறைகள்'' என்ற அலெக்ஸ் ஹெய்லியின் வரலாற்றுப் புதினம் வாழ்க்கையின் உயிர்த் துடிப்புடன் அந்த வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறது.

ஆப்பிரிக்கப் பழங்குடிச் சமூகத்தை விலங்குகளைப் போல வேட்டையாடிக் கொண்டு வந்து, விலங்கினும் கீழாய்த் துன்புறுத்தி அமெரிக்கா என்ற சொர்க்கத்தை உருவாக்கிக் கொண்டார்கள் வெள்ளை முதலாளிகள். உருவாக்கித் தந்த கருப்பின மக்களில் ஆகப் பெரும்பான்மையினர் சென்னை மாநகரின் 'சேரி'களை யொத்த வீடுகளில் வாழ்கிறார்கள்; 'குற்றப் பரம்பரையாக' மாற்றப்பட்டுச் சிறைகளில் வாடுகிறார்கள்.

300 ஆண்டுகள் உழைத்த கருப்பின விவசாயிகளுக்கு இரக்க மனம் கொண்ட வெள்ளை முதலாளிகள் சில பேர், 40 ஏக்கர் நிலமும் ஒரு கோவேறு கழுதையும் வழங்கிய 'பெருந்தன்மை'யை நினைவு கூறுகிறார் சாப்மன். முதலாளிகள் வழங்கிய நிலத்தை அமெரிக்க முதலாளித்துவம் விழுங்கி விட்டது.

**சுதந்திர தேவி ஏந்தி நிற்கும் தீப்பந்தத்தின் ஒளியில், கருப்பின மக்கள் மீதான அநீதியைக் காண முடியவில்லையா?**



இன்று எஞ்சியிருப்பது என்ன? 'நாற்பது அவுன்சு சரக்கு' என்றழைக்கப்படும் மலிவான சாராயமும் கருப்பினச் சேரிக்குள் திடீர் திடீரென நுழைந்து 'குற்றவாளி'களை அள்ளிச் செல்லும் போலீசு வண்டியின் ஊளைச் சத்தமும் பெண்களின் ஓலமும் தான்.

சுதந்திர தேவி ஏந்தி நிற்கும் தீப்பந்தத்தின் ஒளியில் இந்த அநீதியைக் காண முடியவில்லையா? 'தீச்சுடரின் நிழல்' கருப்புச் சேரியின்மீது கவியும்போது எப்படிக் காண முடியும்?

நீண்ட துயரத்தின் குறியீடாய், தங்களது வரலாற்றின் எஞ்சியிருக்கும் ஒரே சாட்சியமாய் சாப்மனின் கண்களில் தென்படுகிறது ஒரு படகு. அவரது மூதாதையர்களை விலங்கிட்டுக் கொண்டு வந்த படகு. அந்தச் சாட்சியமும் அதோ மூழ்கிக் கொண்டிருக்கிறது.

நினைவில் படர்ந்து அலைக்கழிக்கும் வரலாற்றிலிருந்து, நினைவு திரும்பி சட்டெனத் தன்னையே ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக் கொள்கிறார். வசதியான வாழ்க்கை!

''மேலே மேலே ஏறி
முன்னேறி ஓடிவிடத் துடிக்கிறாயே
அந்த அறையை
மூடிவிட முயல்கிறாயே - முடியாது.

நம் முன்னோர்கள்
பசிதீராத ஆவிகள்.
அறை முழுவதும் அவர்களது
எலும்புகள் —
அந்த அறையை மூட முடியாது''

— என்று கருப்பின மேட்டுக் குடியினரைத் தனது பாடலால் குத்திய சாப்மனுக்குத் தனது வாழ்க்கையே முள்ளாய் உறுத்துகிறது. கருப்பின வரலாற்றின் சோகம், மக்களின் அன்றாடத் துயரம் இவற்றின் பின்புலத்தில் தனது 'வெற்றியை' எடைபோடும் போது அந்த முரண்பாடு அவரை நிலைகுலைய வைக்கிறது. நெஞ்சை அறுக்கிறது. வெள்ளை ஆதிக்கத்திற்கெதிரான அவரது விமரிசனம் உணர்ச்சிபூர்வமான சுயவிமரிசனமாக மாறுகிறது.

அமெரிக்க ஜனநாயகத்தின் மீதான அவநம்பிக்கை, அந்தக் கணமே போராட்டத்தின் மீதான நம்பிக்கையாக வெடித்து முளை விடுகிறது. சொல்லும் குரலும், பொருளும் உணர்ச்சியும் சாப்மனின் கிதார் ஒலியில் இசைந்து அடங்குகிறது.

www.padippakam.com

# ஓய்வு பொழுதுபோக்கு இசை ரசனை 4

மருதையன்



விளம்பரங்களோ பொருளின் பயன்பாட்டை அல்லது அதன் சிறப்புத் தன்மையை விளக்குவதைக் காட்டிலும் அதனைப் பயன்படுத்தும் விளம்பர மாடலின் ஆளுமை, வாழ்க்கைப் பாணி ஆகியவற்றையே மனதில் பதியச் செய்கின்றன.

நுகர் பொருளைச் சொந்தமாக்கிக் கொள்வதே தனிமனித ஆளுமையின் அடையாளமாகி விடுகிறது. புலனறிவும் பகுத்தறிவும் தோற்றுவிக்கும் உணர்வுகளெல்லாம் ஒதுக்கப்பட்டு அவற்றின் இடத்தில் 'உடைமை உணர்வு' மட்டுமே எஞ்சியிருக்கிறதென்று முதலாளித்துவ சமூகம் பற்றிக் குறிப்பிட்டார் மார்க்ஸ்.

இந்த நுகர்வு மதத்தின் அப்போஸ்தலர்களான உலகாத்துமாக்களுக்குத் தெரிந்த 'படைப்புத் திறனுள்ள' ஒரே நடவடிக்கை நுகர்வதுதான். உண்பது, குடிப்பது, பொழுதுபோக்குவது என்ற தமது பணியை அவர்கள் இடையறாது தொடர்வதனால்தான் நுகர் பொருள் உற்பத்தித் தொழிலில் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்க முடிகிறது என்பதனால் நுகர்தல் ஒரு 'சமூக நோக்கத்தையும்' பெற்று விடுகிறது.

### சரக்கை நுகரும் சரக்கு!

சந்தையின் தேவையைக் கணக்கில் கொண்டு செய்யப்படும் வர்த்தக நடவடிக்கையாக அறிவியல் ஆய்வும் கண்டுபிடிப்பும் மாறிவிட்டதைப் போல, சந்தையைக் கவரும் விற்பனைத் தந்திரமே கலை முயற்சிக்குரிய தகுதியைப் பெறுகிறது. கலைக்கும் விளம்பரத்திற்குமிடையிலான வேறுபாடு மறைந்து விளம்பரமே கலையாகி விடுகிறது.

தொலைக்காட்சிப் பார்வையாளர்களை அவர்களது ஓய்வு நேரத்திற்கேற்பவும், வாங்கும் திறனுக்கேற்பவும் பல பிரிவுகளாகப் பிரித்து அவர்கள் ரசிக்கக் கூடிய அல்லது ரசிக்க வேண்டிய நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள் விளம்பரதாரர்கள். வாங்கும் திறனும் ரசிக்கும் திறனும் ஒன்றேயாகி விடுகின்றன.

தங்கள் பண்டத்தை வாங்கச் செய்வதன் மூலம் ரசிகனை நுகர்வோனாக மாற்றுகிறார்கள் விளம்பரதாரர்கள். ஒளிபரப்பு நேரத்தை, அதாவது தங்கள் பார்வையாளர்களின் ஓய்வு நேரத்தை விளம்பரதாரர்களுக்கு விலைபேசி விற்பதன் மூலம் பார்வையாளர்களையே விற்பனைக்குரிய பண்டமாக்குகின்றன தொலைக்காட்சி நிறுவனங்கள். பண்டமாற்று இவ்வாறு முடிவடைகிறது. நிகழ்ச்சியைப் பார்க்கும் ரசிகன் சரக்கை நுகரும் சரக்காக மாற்றப்படுகிறான்.

முதல் எட்டு மணி நேரத்தில் விருப்பமில்லாமல் தன் உழைப்புத்திறனைக் கூலிக்கு விற்கும் தொழிலாளி, இரண்டாவது எட்டு மணி நேரத்தில் - ஓய்வு நேரத்தில் - விருப்பத்துடன் தன் சிந்தனைத் திறனை இழக்கச் சம்மதிக்கிறான்.

உழைப்புச் சுரண்டல் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமடைகிறதோ அதே விகிதத்தில் ஓய்வுச் சுரண்டலும் தீவிரமடைகிறது. வேலை உத்திரவாதமின்மை, வேலைவாய்ப்பின்மை, உழைப்புச் சுமை, எதிர்காலம் குறித்த நிச்சயமின்மை - இவையெல்லாம் உழைப்புச் சந்தையில் அதிகரிக்க அதிகரிக்க தன் உழைப்பிலிருந்து தொழிலாளி அந்நியமாவதும் உழைப்பின் மீது வெறுப்பு கொள்வதும் அதிகரிக்கிறது.

அவனுக்குப் புத்துணர்ச்சியூட்டக் காத்திருக்கும் பொழுதுபோக்கு சந்தையும் உடனே தீவிரமாக இயங்கத் தொடங்குகிறது.

### ஆட்கொல்லி இசை!

இந்தப் புத்துணர்ச்சி என்பது ஜப்பானியத் தொழிலாளர்களிடம் பழக்கத்திலிருப்பதைப் போல நிகோடின் பானமாகவோ, மாத்திரை வடிவிலோ, வழங்கப்படும் போது அதன் வேதியியல் தன்மையையும் அது மனித உடலில் ஆற்றும் வினையையும் மருத்துவரீதியில் விளக்க முடியும். அதுவே இசையாக, ரசனையாக, சித்தாந்தமாக, வாழ்க்கையாக, பாணியாகத் தரப்படும் பொழுது?

''எக்ஸ்டஸி எனும் 'பேரின்ப மாத்திரை' நரம்பு மண்டலத்தில் தோற்றுவிக்கும் இரசாயன மாற்றம் எப்படி மகிழ்ச்சி எனும் உணர்ச்சியாக மாற்றம் பெறுகிறதோ, அப்படியே இசையும் நம்மீது வினையாற்றுகிறது'' என்று இந்தத் தொடரின் முதல் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

சமீபத்திய 'டைம்' வார ஏட்டில் அலபாமா மாநிலத்தைச் (அமெரிக்கா) சேர்ந்த ஜீலியன் என்ற



படிப்பகம்

www.padippakam.com

வயதுப் பெண்ணின் மரணம் கிளப்பியுள்ள சர்ச்சையைப் பற்றி ஒரு கட்டுரை வெளி வந்துள்ளது. அவளது மரணத்திற்குக் காரணம் மிதமிஞ்சிய எக்ஸ்டஸி மாத்திரையா, மிதமிஞ்சிய களிவெறி நடனமா என்ற கேள்வி நீதி மன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது.

அந்த நடன விடுதியில் போதை மாத்திரை விற்பனை செய்யப்பட்டதற்கான தடயம் எதுவும் போலீசிடம் இல்லை. ஆனால் எக்ஸ்டஸி மாத்திரை தின்றவர்கள் பற்களை நறநறக்கும்போது பல் பாதுகாப்புக்காகக் கடித்துக் கொள்ளும் ரப்பர் போன்ற பொருள் அவ்விடுதியில் விற்பனை செய்யப்படுவதை ஆதாரமாகக் கொண்டு போதை மருந்து வழக்குப் போட்டிருக்கிறது போலீசு.

''நரம்புகள் முறுக்கேறிப் பற்களை நறநறப்பது என்பது எங்கள் இசை தோற்றுவிக்கும் விளைவு. எனவேதான் அந்த ரப்பர் துண்டுகளை வழங்குகிறோம்'' என்று வாதாடுகிறார்கள் விடுதிக்காரர். அவருக்கு ஆதரவாக 2500 நடன விடுதிகள் களத்திலிறங்கியுள்ளன.

ஜீலியனின் சாவுக்குக் காரணம் போதை மாத்திரைதானென்று நிரூபிக்கப் பட்டால் விடுதிக்காரருக்கு தண்டனை உண்டு. இசைதான் என்று முடிவானால் விடுதிக்காரருக்குத் தண்டனை கிடையாது என்பது மட்டுமல்ல, அந்த ஆட்கொல்லி இசையைத் தடை செய்யவும் முடியாது. ஏனென்றால் அது கருத்துச் சுதந்திரத்தைத் தடை செய்வதாகி விடும்.

பற்களைக் கடிப்பது, உடம்பை முறுக்குவது போன்ற நடவடிக்கைகளின் மூலம் இந்த இசை ரசிகர்கள் என்ன கருத்தை அல்லது உணர்ச்சியை வெளியிட விரும்புகிறார்கள்?

அதே போன்ற இசையைக் கேட்டும், தொலைக்காட்சியில் பார்த்தும் ரசித்துக் கொண்டிருக்கும் நமது இளைஞர்கள் அமெரிக்க இளைஞர்களைப் போலப் பற்களைக் கடித்துக் கொண்டு உடம்பை முறுக்காதது ஏன்? வெளிப்படுத்தப்படாத அந்த உணர்ச்சி காற்றில் கரைந்த கற்பூரமாக அவர்களுக்குள்ளேயிருந்து மறைந்து விடுகிறதா? அல்லது வெளிப்படுவதற்குத் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறதா?

**அறிவுக்கு நிஜ உலகம் உணர்ச்சிக்கு நிழல் உலகமா?**

''உங்களது சிந்தனையைத் தகர்த்துச் சிதறடிக்கும் இசை'' (music that will blow your mind to pieces) என்று சமீபத்தில் சென்னையில் ஒரு விளம்பரம் வந்தது. சிந்தனையைத் தகர்த்துச் சிதறடித்த பின் மூளை என்ற பொருள் சிதறாமல் உயிருடன் இருந்து என்ன பயன்? ஜீலியனின் மரணத்திலிருந்து நம் இளைஞர்கள் வெகு தூரத்தில் இல்லை என்பதற்கு இந்த விளம்பரம் ஒரு சான்று.

பொருளியல் சக்திகள் உளவியல் சக்திகளைத் தீர்மானிக்கும்; உளவியல் சக்திகளோ பொருளியல் சக்திகளைப் பாதிக்கும். பொருளுக்கும் கருத்துக்கும் இடையிலான இயங்கியல் உறவு இது.

எக்ஸ்டஸி மாத்திரை விழுங்கியவன் ராக் இசையைக் கேட்க விரும்புவானேயன்றி நீலாம்பரி ராகம் கேட்க விரும்பமாட்டான். வழிப்பறிக்காரனிடம் பணத்தைப் பறிகொடுத்தவன் களிவெறி இசைக்கு நடனமாட மாட்டான். ஆடுபவன் 'பைத்தியம்' என்றே அழைக்கப்படுவான்.

ஏனென்றால், அறிவை நிஜ உலகமும், உணர்ச்சியை நிழல் உலகமும் ஒரே நேரத்தில் ஆள முடியாது.

ஆனால் தனிமனித உணர்ச்சியை மதிப்பிட பயன்படுத்தப்படும் இந்த அளவுகோல், சமூகத்தின் உணர்ச்சியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

பணத்தைப் பறிகொடுத்துவிட்டு, அதைப் பற்றிய கவலையோ, வருத்தமோ, கோபமோ, பொறுப்புணர்ச்சியோ இல்லாமல் பாட்டுப்பாடி நடனமாடும் தனிமனிதனைப் பைத்தியம் என்று தயங்காமல் கூறுபவர்கள், அதே வகையைச் சேர்ந்த பைத்தியக்காரத்தனத்தில் ஒரு சமூகமே ஆழ்ந்திருக்கும் நிலையைப் பொழுதுபோக்கு என்றும் புத்துணர்ச்சிக்கான நடவடிக்கை என்றும் வியாக்கியானம் செய்கிறார்கள்.

> **தங்கள் பண்டத்தை வாங்கச் செய்வதன் மூலம் ரசிகனை நுகர்வோனாக மாற்றுகிறார்கள் விளம்பரதாரர்கள். ஒளிபரப்பு நேரத்தை, அதாவது தங்கள் பார்வையாளர்களின் ஓய்வு நேரத்தை விளம்பரதாரர்களுக்கு விலைபேசி விற்பதன் மூலம் பார்வையாளர்களையே விற்பனைக்குரிய பண்டமாக்குகின்றன தொலைக்காட்சி நிறுவனங்கள்**





படிப்பகம்

www.padippakam.com

**நான் அவனில்லை!**

சித்தியின் துயரத்துக்குக் கண்கலங்குவதும், 'எங்கேயும் போய்டாதீங்க' என்று பெப்சி உமாவின் வேண்டுகோளை ஏற்று அங்கேயே காத்திருப்பதும், தமிழ் சினிமா மற்றும் எம்.டி.வி நடனங்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பதும் ''சும்மா ஒரு பொழுதுபோக்குத்தான்'' என்றும்,

அடுக்கடுக்கான சித்தியின் துயரங்கள் அபத்தமானவை என்பதும், பெப்சி உமாவின் அரட்டை அசட்டுத்தனமானதென்பதும், நடனம் அருவெறுப்பானதென்பதும் தங்களுக்கு ஏற்கனவ தெரியுமென்றும் அவசரமாக விளக்கம் சொல்கிறார்கள். இந்த அபத்தம், அசட்டுத்தனம், அருவெறுப்பிற்கும் தங்களது உண்மையான அறிவு, நடத்தை மற்றும் ஒழுக்கத்திற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றும் நம்புகிறார்கள்; நம்பச் சொல்கிறார்கள்.

நமக்குத் தேவைப்படுவதோ புதிய உணர்வு. உழைப்பைத் துன்பமாகவும் ஓய்வை இன்பமாகவும் கருத வைக்கும் இந்த முதலாளித்துவ உடைமை உறவினை ஒழிப்பதன் மூலம் உழைப்பையே இன்பமாக உணரும் ஒரு புதிய சமூகத்தை உருவாக்கத் தேவையான - விடுதலை உணர்வு.

''நான் அவனில்லை'' எனும் இந்தக் கூற்று நடிகர்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம் - ரசிகர்களுக்குப் பொருந்தாது. ராதிகாவின் கண்ணீர் கிளிசரின் கண்ணீராக இருக்கக் கூடும். ரசிகனின் கண்ணீரோ அழகியல் உணர்ச்சியால் உருகி வந்த கண்ணீர்.

கண்ணீர், மகிழ்ச்சி, வெடிச்சிரிப்பு, சோகம், ஆவல், ஏக்கம் என்று எந்த வகையான அழகியல் உணர்ச்சியை உங்களிடமிருந்து இந்த பொழுதுபோக்குத் தொழில் (Entertainment Industry) உருவாக்கினாலும் சரி, அது உண்மையான வாழ்க்கையில், உரிய தருணத்தில், உண்மையான உணர்ச்சியாக மாறியே தீரும். பகுத்தறிவின் துணை கொண்டு அதன் பிடியிலிருந்து நீங்கள் விடுபடாத வரை.

தரம் தாழ்ந்த நகைச்சுவை உங்களை சிரிக்க வைத்தால், களிவெறி நடனம் உங்களை மயங்க வைத்தால், நுகர்பொருள் விளம்பரங்களும் அதிர்ஷ்டக்கார உலகாத்மாக்களின் வாழ்க்கை முறையும் உங்களைக் கவர்ந்திழுத்தால், உங்களுடைய ரசனையிலிருந்து, அந்த ரசனை உங்களிடம் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளிலிருந்து உங்களுக்குள்ளேயே வேறொரு ஆளுமை உருவாகிறது என்று பொருள். அதை நீங்களே அறியாமல் இருந்தாலும், மறுத்தாலும் அதுதான் உண்மை.

அழகியல் உணர்ச்சி என்பது இரண்டாவது எதார்த்தம். இதில் மூழ்கினால் ''நாம் என்னவாக விரும்புகிறோம்' என்பது ''நாம் எதைப் போலத் தோன்ற விரும்புகிறோம்'' என்று மாறிவிடும்.

இதைத்தான் நம்மீது வகைவகையான பொழுதுபோக்குகளை ஏவிவிட்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் சாதிக்க விரும்புகின்றன.

''மூலதனம் பொருள் வகையில் அடையும் ஆதாயத்திற்கு இணையான அளவுக்குத் தொழிலாளி தன் சாரத்தை இழக்கிறான்'' என்றார் மார்க்ஸ். முதலாளித்துவம் ஊட்டும் புத்துணர்ச்சி என்பது உழைப்பாளிகளின் சாரத்தை மேலும் சீர்குலைப்பதற்கான ஒரு சூழ்ச்சி. கருத்தியல் ரீதியில் தன்னுடைய நிழல்களாக நம்மை நீர்த்துப் போக வைக்கும் சதி.

நமக்குத் தேவைப்படுவதோ புதிய உணர்வு. உழைப்பைத் துன்பமாகவும் ஓய்வை இன்பமாகவும் கருத வைக்கும் இந்த முதலாளித்துவ உடைமை உறவினை ஒழிப்பதன் மூலம் உழைப்பையே இன்பமாக உணரும் ஒரு புதிய சமூகத்தை உருவாக்கத் தேவையான - விடுதலை உணர்வு.

இந்தப் புதிய உணர்வினைத் தருகின்ற இசையையும், அந்த உணர்வினைப் பெறுகின்ற ரசனையையும் எந்த விளம்பரதாரரும் நமக்குத் தயாரித்து வழங்க முடியாது.

அவற்றை நம்முடைய போராட்டத்தினூடாக நாம்தான் உருவாக்க வேண்டும்; அதற்காக உழைக்க வேண்டும் - நமது ஓய்வு நேரத்திலும் கூட.

— முற்றும் —

# தீக்கொழுந்து
# உருவாகிய கதை

**கோ**வை மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டை ஒட்டி, நாடு மறுகாலனியாக்கப்படும் அபாயத்தை உணர்த்தும் வண்ணம் ஒரு குறும்படம் தயாரிக்க முடிவு செய்தோம். கைத்தறி, விசைத்தறி, தீப்பெட்டி, சிறுதொழில், கோழிப் பண்ணை, காய்கறி, தென்னை, பால், ரப்பர், தேயிலை என பல்வேறு பிரிவுகள் உலகமயமாக்கத்தால் நசுக்கப்பட்டு வருகின்றன. இவையனைத்தையும் ஒரு பறவைப் பார்வையினூடாக பதிவு செய்து ஒரு முழுமையான கண்ணோட்டத்தை ஏற்படுத்தலாம் என்றே முதலில் நினைத்தோம். ஆனால் அதற்கான காலமின்மை, பல்வேறு பிரச்சனைகளைக் காட்சி ஊடகத்தில் புரிய வைப்பது இயலாது என்பதால் ஏதாவது ஒரு பிரச்சினையின் மூலம் உலகமயத்தின் கேடுகளை விரிவாக, அழுத்தமாக விளக்க முயன்றோம்.

அதிலும் கடந்த மூன்றாண்டுகளாய் நீலகிரி மாவட்டத்தில் புகைந்து வரும் தேயிலைப் பிரச்சினை மறுகாலனியாக்கத்தின் எடுப்பான வகைமாதிரியாக, விலைவீழ்ச்சி, வாழ்க்கை பாதிப்பு, போராட்டம், அடக்குமுறை என அனைத்து அம்சங்களையும் கொண்டிருந்ததால் அதையே தெரிவு செய்தோம். செய்தித்தரவுகள் சேகரித்துக் கொண்டு ஒரு பொதுவான திரைக்கதை அமைத்துக் கொண்டு தயாரானோம். 'மினி டி.வி ஃபார்மெட்' எனப்படும் கையடக்க காமெரா மற்றும் வாகனம் ஒன்றுடன் புறப்பட்டோம்.






படிப்பகம்

www.padippakam.com

திரைப்படங்களில் உதவி ஒளிப்பதிவாளராகப் பணி புரியும் இளைஞர் மற்றும் தோழர்கள் அடங்கிய குழுவுடன் நீலகிரி சென்றோம். காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை ஏழு நாட்கள் மட்டும் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. அதிகாலையில் தேயிலைத் தோட்டத்து தொழிலாளிகளின் வாழ்க்கை - உழைப்புக் காட்சிகள் இயற்கையின் பின்னணியில் எடுக்கப்பட்டன. பகலில் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள், விவசாயத் தலைவர்களின் உள் அரங்கு பேட்டிகளும், மாலை - இரவில் மக்கள் குடியிருப்பில் திறந்தவெளி கலந்துரையாடல்களும் பதிவு செய்யப்பட்டன.

நீலகிரியின் பெருமளவு நிலப்பரப்பு வனத்துறை, இராணுவம், பெரும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமானது. இங்கெல்லாம் படமெடுக்க அனுமதியில்லை. குறிப்பாக ஆயிரக்கணக்கான ஏக்கர் தேயிலைத் தோட்டங்களை வைத்திருக்கும் எஸ்டேட் வளாகத்தில் நுழையவே முடியாது. இருப்பினும் பல்வேறு காரணங்களை விளக்கி, சந்தேகம் வரமுடியாதபடி இத்தகைய காட்சிகளைக் கைப்பற்றினோம். நெடுஞ்சாலைகளிலும், குறுக்குச் சாலைகளிலும் தினந்தோறும் அடிக்கடி கடந்துபோகும் எமது வாகனம் சந்தேகத்திற்குரியதாக மாறிவிட்டாலும் பெரும் பிரச்சினைகள் ஏதும் வரவில்லை. இருந்தபோதும் வாகன ஓட்டுநராக இருந்த நண்பருக்கு பதட்டம் குறைவதாயில்லை. படப்பிடிப்பு முடிந்து கோவைக்கு திரும்பிய போது வாகனம் தப்பிப் பிழைத்தது போல அதிவேகத்தில் சென்றது.

தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளில் பெரும்பாலானோர் கன்னட வழக்கு மொழி பேசும் படுகர் சாதி மக்களாவர். மிகவும் குறுகிய உலகிலிருந்த இம்மக்களை உலக வர்த்தகக் கழகம், புதிய பொருளாதாரக் கொள்கை என்று விரிந்த பார்வையுடன் பேச வைத்திருக்கிறது, தேயிலையின் விலைவீழ்ச்சி குறித்த பிரச்சினை. இருப்பினும் அரசு அடக்குமுறைக்கேற்ப இவர்களது தைரியமும் - பயமும் இடங்களுக்கேற்ப மாறுபடுகிறது. குண்டன் எம்.எல்.ஏவை விரட்டிய மீக்கேரி மக்களைச் சந்திக்கச் சென்றபோது 2 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. கவுடா என்று மதிக்கப்படும் ஊர்த் தலைவர்கள் மற்றும் முதியவர்கள் பேட்டி கொடுக்க மறுத்தனர். ஜெயா டி.வி., சன் டி.வி.க்கு பேட்டி கொடுக்கும்போது இவர்களுக்கு கொடுப்பதில் என்ன தவறு என்று இளைஞர்கள் நியாயம் கேட்டனர்.

போராட்டத்தின் போது போலீசாரால் அரைநிர்வாணமாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட இதே பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் நமது நோக்கத்தைப் புரிந்து கொண்டு நேர்காணல் அளித்தனர். ஜக்க நாரையைச் சேர்ந்த சிறு விவசாயிகளோ போராட்டத்தின் போர்க்குணமிக்க உணர்ச்சியையும் - கருத்தையும் தமது கலந்துரையாடலில் கொண்டு வந்தனர். பல்வேறு இடங்களில் படுகர் பிரிவு பெண்கள் — சிறு விவசாயிகளது தோட்டங்களில் அதிகமும் பாடுபடும் உழைப்பாளிகள், விலை வீழ்ச்சியினால் ஏற்பட்ட வாழ்க்கையின் அவலத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். சிறு விவசாயிகள் சங்கத் தைச் சேர்ந்த பலர் போராட்டத்தின் போது வந்த நாளிதழ் செய்திகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் கொடுத்துதவினர்.



விவசாயிகளது தோட்டங்கள் மற்றும் பெரும் முதலாளிகளது எஸ்டேட்டுகளில் வேலை செய்யும் கூலித் தொழிலாளிகள் நீலகிரி தேயிலைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போன்றவர்களாவர். கேரளம், இலங்கை - மலையகம், மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து குடியிருக்கும் இத்தொழிலாளிகளின் சில காலனிகளுக்குச் சென்றோம். படத்தின் பல்வேறு காட்சிகளில் வரும் ஆடுபட்டு காலனி மக்களின் கலந்துரையாடல் முக்கியமான ஒன்று. இருட்டிய பின்னரும், மின்சாரமும், படியுமற்ற மலைப்பாதையில் தீப்பந்தங்களுடன் ஆண்களும், பெண்களும் திரண்டு வந்து 4 மணிநேரம் நடுங்கும் குளிரில் கலந்துரையாடினர்.

வெள்ளையர்களிடம் நிலங்களைப் பறிகொடுத்து இன்றும் அப்பாவிகளாய் வாழ்ந்துவரும் தோடர், இருளர், குறும்பர் போன்ற பழங்குடியின மக்களையும் இங்கே பதிவு செய்திருக்கிறோம். அரசின் சுற்றுலாத் துறையினால் அருங்காட்சிப் பொருட்களாகக் காட்டப்படும் இம்மக்களை, வாழ்வையும் - நிலத்தையும் பறிகொடுத்த வரலாறாக நாம் காட்டியிருக்கிறோம்.

தி.மு.க., பாரதீய ஜனதா, வலது கம்யூனிஸ்டு தலைவர்கள், தேநீர் வாரிய அதிகாரி, எஸ்டேட் முதலாளி, ஏலமெடுக்கும் சிறு வியாபாரி ஆகியோர் அதிகாரிகள் - தலைவர்கள் - வியாபாரிகள் - முதலாளிகள் பிரிவினரின் வகைமாதிரிகளாய் இங்கே சேர்க்கப்பட்டிருக்கின்னர். அனைவரும் தேயிலை விலை வீழ்ச்சிக்கு பன்னாட்டு நிறுவனங்கள் - குறிப்பாக இந்துஸ்தான் லீவரே காரணம் என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றனர். கோவையிலிருக்கும் இந்துஸ்தான் லீவரின் அதிகாரிகளோ நேர்காணலுக்கு மறுத்துவிட்டனர்.

விவசாயிகளின் போராட்டத்தின் போது நடந்த அடக்குமுறை, அரசு வைத்த வாதங்கள், நீதிமன்ற வழக்கு விபரங்கள் போன்றவை உதகை வழக்குரைஞர் ஒருவர் அளித்த விரிவான நேர்காணலும் இப்படத்தில் முக்கியமானது ஆகும். இறுதியாக நீலகிரியில் பிறந்து வளர்ந்த தொழிலாளிகளே சென்றிராத ஊட்டியின் சுற்றுலாக் காட்சிகளையும் பதிவாக்கிய போது ஏழு நாட்கள் முடிந்து விட்டன. ஏறக்குறைய 21 மணிநேர படப்பதிவு பேழை





படிப்பகம்

www.padippakam.com

# தீக்கொழுந்து - பத்திரிகையாளர் ஞாநியின் விமர்சனம்

ஒவ்வொரு தேர்தலின் போதும் ஒரு மக்கள் பிரச்சினை செய்திகளில் அடிபடுவதும், தேர்தலுக்குச் சற்று முன்பாகவோ பின்பாகவோ அது அலட்சியப்படுத்தப்பட்டு மறக்கப்படுவதும் நமது அரசியல் பண்பாட்டின்ஓர்அங்கமாகவேஇருக்கிறது.

மிக அண்மைக்காலத்தில் அப்படிப்பட்ட கதியைச் சந்தித்த ஒரு மக்கள் பிரச்சினை மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்போராட்டமும் அதையடுத்து நடந்த தாமிரபரணி ஆற்றுப் படுகொலைகளுமாகும். மக்களவைத் தேர்தலுக்குச் சற்று முன்னதாக நடந்த இந்தப் படுகொலைப் பிரச்சினை அந்தத் தேர்தலிலேயே கைவிடப்பட்டது. அடுத்து ஒரு மாதம் முன்பு நடந்த மாநில சட்டப் பேரவைத் தேர்தலின் போது மாஞ்சோலைத் தொழிலாளர் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த புதிய தமிழகம் கட்சியும் தாமிரபரணிப் படுகொலைகளுக்குப் பொறுப்பான ஆளுங்கட்சியானதி.மு.க.வும் ஓரணியில் இணைந்து, பிரச்சினையை முழுமையாக அமுக்கிவிட்டன.

இந்தத் தேர்தலுக்குச் சற்று முன்னதாகக் கவனத்தை ஈர்த்த இன்னொரு தொழிலாளர்போராட்டம் நீலகிரி தேயிலை விவசாயிகள் - தொழிலாளார்களுடையது. பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சியை அடுத்து எழுந்த போராட்டம் இது.

இதுவும் தேர்தல் முடிந்ததும் அரசியல் கட்சிகளால் மறக்கடிக்கப்பட்டுவிடும் சூழ்நிலைதான் உள்ளது.

ஆனால் இப்படிப்பட்ட முக்கியமான மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை மக்கள் மறந்துவிடாமல் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும் கடமையை பொறுப்புள்ள ஊடகம் (மீடியா) செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு பணியை *புதிய கலாச்சாரம் திரை முழக்கம் குழு* **‘தீக்கொழுந்து’** என்ற படப்பதிவின் மூலம் செய்திருக்கிறது.

பச்சைத்தேயிலை விலை வீழ்ச்சிக்குப் பின்னால் உள்ள அத்தனைச் சிக்கல்களையும் இந்தப் படம் அவிழ்த்துக் காட்டியிருக்கிறது. நீலகிரியில் தேயிலைத் தோட்ட முதலாளிகளில் பெரிய முதலாளிகளான பன்னாட்டு நிறுவனங்களை மீறி சிறு விவசாயிகள் செயல்படமுடியாத பொருளாதார நிலைமை, தேயிலை வாரியம் யார் சார்பாகச் செயல்பட்டு வருகிறது என்ற பார்வை, போராட்டத்தில் ஈடுபட்ட சிறு விவசாயிகள், தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகள், போராட்டத்துக்கு அவர்களை உந்திய காரணங்கள், போராட்டம் பற்றி ஆளுங்கட்சிகளான தி.மு.க., பா.ஜ.க. பிரமுகர்களின் ஒப்புதல், வாக்குமூலக் கருத்துக்கள், தேயிலை விலை வீழ்ச்சிக்கும் உலகமயமாதலுக்கும் உள்ள தொடர்பு, வரலாற்று ரீதியாக நீலகிரி தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதில், இலங்கையிலிருந்து நாடற்றவர்களாக ஆக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட மலையகத் தமிழர்களின் பங்களிப்பு என்று ஏராளமான செய்திகள் இந்தப் படத்தில் தெரிவிக்கப்படுகின்றன.

ஊட்டிக்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் இருந்துகொண்டு ஊட்டியையே வாழ்நாளில் சென்று பார்த்திராத மலைக்கிராம மக்களின் யந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறை, மெல்ல மெல்ல சிறு விவசாயிகளுடைய தோட்டங்களும் பன்னாட்டு நிறுவனங்களால் அடுத்த பத்தாண்டுகளுக்குள் அபகரிக்கப்பட்டுவிடும் என்ற யதார்த்த நிலை, நீலகிரிப் பகுதியில் தேயிலை பாதிக்கப்பட்டால் வட்டாரத்தின் முழுப் பொருளாதாரமும் எப்படிப் பாதிக்கப்படும் என்ற சங்கிலித் தொடர் நிலைமை எல்லாம் இந்தப் படத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இரு பகுதிகளாக மொத்தம் சுமார் 110 நிமிட நீளத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஒளிக் குறுந்தகடுகள் வீடியோ மீடியத்தின் முழு வலிமையையும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. *புதிய கலாச்சாரம்* இதழின் கட்டுரைகளிலும், *ம.க.இ.க.*வின் ஒலி நாடாக்களின் இசைப் பாடல்களிலும் வெளிப்படுகிற செய்நேர்த்தி, இந்த வீடியோவில் இல்லை. இதுவே இந்தத் துறையில் குழுவின் முதல் முயற்சி என்பது காரணமாயிருக்கலாம். பத்து வரிகளில் எழுதுவதை ஒரு வரியிலேயே சொல்லிவிடக் கூடிய ஆற்றலுக்கு நிகரானது காட்சி வடிவம். இதில் பல இடங்களில் படிப்பறிவு உள்ளவர்கள் மட்டுமே படித்துத் தெரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் முக்கியமான புள்ளி விவரங்களை எழுத்து வடிவில் காட்டியிருப்பது இந்த வடிவத்தின் பலத்தைக் குறைக்கிறது. அந்த விவரங்கள் ஒலி வடிவில் தரப்பட்டிருக்க வேண்டும்.

மக்கள் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டிய, உணர்ந்து கொள்ள வேண்டிய செய்திகளை இந்தப் படம் கொண்டிருந்தாலும், படத்தின் நீளம் சராசரி பார்வையாளருக்கு அதிகமானது. இந்தப் பிரச்சினையில் ஏற்கனவே ஈடுபாடு உள்ளவர்களுக்கு நீளம் பிரச்சினையாக இருக்காது. படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு பாடல்கள் தனியே நன்றாக இருந்தாலும், படத்தில் அவை தொய்வையே ஏற்படுத்துகின்றன. தொகுப்புரை பல்வேறு அம்சங்களை ஒரு தொடர் சரடாக ஒன்றிலிருந்து மற்றொன்று இயல்பாகப் பாயும் விதத்தில் அமைக்கப்படாததால் படம் திடீர் திடீரென்று வெவ்வேறு விஷயங்களுக்குச் சென்று திரும்பி வருவது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இந்தப் படத்தை 30 நிமிடப் படமாகக் குறைத்து எடிட் செய்து வெளியிட்டால் பரவலாக பார்வையாளர்களை சென்றடையக் கூடிய ஒரு சக்தி வாய்ந்த ஆவணப் படமாக இது அமையும்.

எனினும், தினசரி டீக்கடைக்குச் சென்று சாதாரணமாக டீ குடித்து விட்டுத் திரும்பும் மனிதனுக்கு, அந்த டீ தயாரிப்புக்குப் பின்னால் இத்தனைத் துயரங்கள், கொடுமைகள், சமூக அநீதிகள், இலாப வேட்டை சூழ்ச்சிகள் இருப்பதை தெரியப்படுத்தும் முதல் முயற்சியாக இந்தப் படம் அமைந்திருக்கிறது வரவேற்புக்குரியது.

• ஞாநி

---

களில் பதிவு செய்யப்பட்டது.

இந்த 21 மணி நேரத்தை ஒன்றரை மணி நேரக் குறும்படமாகக் குறைப்பது படப்பிடிப்பைக் காட்டிலும் கடும் பணியாயிருந்தது. ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் எமது பொறுமையை பெரிதும் சோதித்தன. ஒரு வழியாக எல்லாமும் முடிந்து கோவையில் திரையிட்டபோது ‘தீக்கொழுந்து’ பற்றிய கனவும் நனவும் அரங்கேறியபோது, படம் முடிந்து ஒவ்வொரு தோழரும் ஒவ்வொரு கோணத்தில் பாராட்டியபோது, மக்களுக்கான காட்சி ஊடகக் கலை மெல்ல முகிழ்ந்து வரும் என்ற நம்பிக்கை தோன்றியது.

அரசியல் - போராட்ட குறும்படங்கள் அருகியிருக்கும் தமிழகச் சூழ்நிலையில் ‘தீக்கொழுந்தின்’ முக்கியத்துவம், அதன் திரைக்கதை அமைக்கப்பட்ட விதம், அதன் வடிவம் - அழகியல் - படத்தின் நீளம் தோழர்கள் - நண்பர்கள் அளித்திருக்கும் விமர்சனம் ஆகியவற்றை அடுத்த இதழில் காண்போம்.

— அடுத்த இதழில் நிறைவுறும்.

‘தீக்கொழுந்து’ நீலமலைத் தேயிலை விவசாயிகளின் போராட்டம் பற்றிய களச்சித்திரம். இரு பாகமாய் - இரு குறுந்தகடுகள் விலை ரூ. 250. தபால் செலவு ரூ. 20. தேவைப்படுவோர் இரா. சீனிவாசன் பெயருக்கு புதிய கலாச்சாரம் முகவரிக்கு பணம் அனுப்பலாம்.



படிப்பகம்

www.padippakam.com

கற்பி! கிளர்ச்சி செய்!! ஒன்று சேர்!!!



## அமைதிப் பேச்சு வார்த்தை என்ற பெயரில் அழுகும் அருந்ததியர் பிணங்கள்

- செய்தி - நன்றி "புதிய கலாச்சாரம்", ஜூலை 2001

தமிழக அரசே!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் T-மேட்டுப்பட்டி கிராம அருந்ததிய மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுக்கும் ஆதிக்க சாதி வெறியர்களையும், அதற்கு துணை போகும் அரசு அதிகாரிகளையும் 1989 SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடு.

இவண்

**அருந்ததியர் விடுதலை முன்னணி**

அரக்கோணம்

'ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்' கட்டுரை. அம்பேத்கரின் இந்துமத எதிர்ப்புக் கண்ணோட்டம் பற்றிய விசயங்கள் புதியவையாக இருந்தன.

வர்க்கப் புரட்சி மதங்களைக் கடந்தது. அதற்கு இசுலாமும் விதிவிலக்கல்ல என்பதற்கு தோழர். அப்துல் ரஷீதின் 'சோவியத் யூனியன் எங்கள் காபா' என்ற கடிதம் சான்றாக விளங்குகிறது.

வாசகர்கள் கலந்து கொள்ள தங்கள் சந்தேகங்களை பகிர்ந்து கொள்ள மாநிலம் தழுவிய ஒரு வாசகர் கூட்டம் நடத்தப்பட வேண்டும். ஆசிரியர் குழு தங்கள் செயல்பாடு பற்றி விளக்குவதும், பத்திரிகை கடந்து வந்த பாதைகளையும் தெரியப்படுத்தலாம். அப்போது வாசகர்களும், தோழர்களும் ஒரு புதிய கோணத்தில் ஒன்றிணைய வாய்ப்பாகும் எனக் கருதுகிறோம்.

**— சுரேஷ்,**
**திருச்சி.**

### ஓய்வு, பொழுது போக்கு, இசைரசனை

✍ பொழுதுபோக்கு, இசை, கலைகள், பண்பாடு போன்றவற்றின் பொருளியல் வேரைத் தொட்டுணர்ந்துவிட விருப்பம் மேலிட்டாலும், அது ஐம்புலன்களுக்கப்பால் அறிவால் மட்டுமே உணர்வதாய் இருக்கிறது. இவற்றை அறிய மார்க்சியத்தின் பொருள்முதல்வாதம் கைக்கருவியாகப் பயன்படும் என்றாலும், அதைக் கையாள்வதுதான் இயலாததாய் இருக்கிறது. இக்கட்டுரை அத்தகைய சிறந்த ஆய்வும், அதற்கேற்ற வடிவத்தையும் கொண்டிருக்கிறது. இதில் குறிப்பிட்டுச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்றால், உலக ஏகபோகமே உலக ஜனநாயகம் என்கிற கருத்து சரியாக அல்லது போதுமான அளவு விளக்கப்படாததால் புரியவில்லை.

ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என்கிற முறையில் இப்பண்பாடுகளை வழங்குவதாக சொல்லியிருப்பதும், உலக வர்த்தகக் கழகத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை அடிப்படையில்தான் உலக இசையிலும் ஏழை மக்களின் உணர்வுகளுக்கு இடமளிக்கப்பட்டிருக்கும் என்ற ஒப்பீடும், பொருளாதார வாழ்வுதான் பண்பாட்டுச் சிந்தனைகளைத் தீர்மானிக்கும் என்கிற விதிக்கான நிரூபணம் போல இவ்வளவு நேரடியாகப் பொருந்தியிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

''சாதி, மதம், வர்க்கம், தேசம், மொழி, இனம் ஆகிய அனைத்து அடையாளங்களையும் கவிழ்த்தே விட்டது நுகர்வோன் என்கிற அடையாளம்''. என்கிறது கட்டுரை. இதில் வர்க்கத்தைச் சேர்த்துவிட்டால் எப்படி? எல்லாம் முடிந்து போனது போலாகிவிடுகிறதே. மனிதனின் மூக்கும் முழியும் என்கிற அடிப்படை அடையாளங்களைக் கூட மரத்து விடும்படி மெழுகில் தேய்த்தெடுக்கப்பட்ட பொம்மைகளாய் மனிதனைத் திணிக்கிறது நுகர்வியம். அதில் நுகர்வோனின் ஏனைய அடையாளங்களும் வர்க்கத்தில்தானே கரைகிறது. நுகர்வோன் என்கிற பொது அடையாளத்தில் 'எதையெல்லாம் நுகர்வோன், எவ்வளவு நுகர்வோன்' என்று வெளிப்படுவதும், வேறுபடுவதும் வர்க்க அடையாளம்தானே. இந்த ஏற்றத்தாழ்வு முதலில் அளவாயிருந்து பின்பு பண்பாக மாறி இருபெரும் வர்க்கமாய் எதிர்நின்று போரிடுமாறு ஆகிறது. அப்போது நுகர்வோனிலிருந்து வெளிப்படும் உழைப்பாளி மீண்டும் இழந்ததனைத்தையும் புதிய பரிமாணத்தில் மீட்பதும், அவசியமற்றதை அறிந்து உதிர்ப்பதும்தானே நடக்கும்!

**— சிங்காரம்,**
**திருச்சி.**

✍ 'விசாரணைக் கமிஷன்' கதைக்காக பல தோழர்களிடமிருந்து பாராட்டுகள் வந்தது. பெற்றுத் தந்த புதிய கலாச்சாரத்திற்கு நன்றி. **சே குவேரா** ஒருமுறை அடக்குமுறை நிறைந்த பழைய கியூபா மக்களின் சுகாதாரத்தைப் பற்றி எழுதும் போது மக்கள் காட்டுப் பூக்களைப் போல தானாக வளர்கிறார்கள், மலர்கிறார்கள், காரணமின்றே மடிந்து போகிறார்கள் எனக் கூறினார். இந்தியாவில் முறையான மருத்துவம் இன்றி என்ன நோயால், என்ன காரணத்திற்கு இறக்கிறோம் என அறியாமல் எண்ணிலா பேர்கள் இறப்பதை அறியும் போது மிகவும் சங்கடமாக இருக்கிறது. மருத்துவத் துறையில் இத்தனை அவலங்களா? தொடர்ந்து எழுதுங்கள் என்கின்றனர் பலர்.

**— மருத்துவர் அ. சிவசுப்ரமணிய**
**ஜெயசேகர்.**

✍ 'அமைதிப் பேச்சு வார்த்தையில் அழுகும் பிணங்கள்' என்ற தலைப்பில், அருந்ததியினர்களின் மீதான தீண்டாமையை, உரிமை மீறலை தங்களுக்கேயுரிய பாணியில் உணர்ச்சிப்பூர்வமாக செய்திப் பதிவாக்கியது அனைவரது உள்ளத்திலும் ஆழப் பதிவாகியது. இதுபோல ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்குரல்களைப் பதிவு செய்வதை தலித் முரசு, புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம் போன்ற இதழ்களில்தான் காணமுடியும். பார்ப்பனர்களின் பார்ப்பனீயத்தை எதிர்த்துக் கொண்டு, நவீன பார்ப்பனத் தன்மையுடன் 'சமுதாய அரசியல்' பேசும் ''நந்தன் வழி'' போன்ற இதழ்கள் மத்தியில் உழைக்கும் மக்களின் குரல் எங்கு ஒலித்தாலும் அவைகளை உணர்வுபூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் செய்திகளைப் பதிவு செய்யும் ''புதிய கலாச்சாரம்'' வெகுவான மக்களிடம் நிரந்தர இடம் பிடித்துக் கொண்டு வருகிறது.

***— அ. தயாளன்,***
***மாநில பொதுச் செயலாளர்,***
***அருந்ததியர் விடுதலை முன்னணி,***
***நரசிங்கபுரம் கிராமம்,***
***திருவள்ளூர் வட்டம்.***

✍ 21.6.2001-இல் உத்தமபாளையம் தாலுகா ஆபீசில் கண் துடைப்புக்காகக் கூட்டப்பட்ட அமைதிப் பேச்சு வார்த்தைக்குப் பொருத்தமான தலைப்பு கொடுத்து, அன்று நடந்த சம்பவத்தை அப்படியே பிரசுரித்த புதிய கலாச்சாரம் பத்திரிகைக்கும், அன்று நடந்த உரையாடலை அடிபிறழாமல் தொகுத்துக் கொடுத்த இப்பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணிச் செயலாளர் தோழர். பாக்கியராசு அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***— பா. முத்தையா,***
***முன்னாள் இராணுவ அதிகாரி,***
***அருந்ததியர் முன்னேற்றச் சங்கம்,***
***தே. மேட்டுப்பட்டி,***
***தேனி மாவட்டம்.***

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42847/87
Regd. No. TN/Chief PMG-303 / 2001
www.padippakam.com

# இத்தாலியில் திரண்ட இலட்சக்கணக்கான மக்கள்:

## தொடர்கிறது... அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கு எதிரான போர்!














படிப்பகம்